

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in  நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி  murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 101 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 04 – திங்கள்கிழமை 20 நவம்பர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 101: Thiruvalluvar Year - 2054 - Karthigai 04 - Monday 20 November 2023 - Madurai 12 Pages ₹ 5.00


### உச்சநீதிமன்றத்தில் இன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது!

# ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக - தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு!

## அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் வாதிடுகின்றனர்!

**புதுடெல்லி, நவ. 20 -**

**ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக, தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது. இவ்வழக்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் ஆஜராகி வாதாடுகின்றனர்.**

அதன் விபரம் வருமாறு:–

மாநில அரசால் அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலதமாதப்படுத்தும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகளை சட்டவிரோதம் என அறிவிக்க உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் தரப்பில் அண்மையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பாக கடந்த 6ஆம் தேதி தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் அடங்கிய அமர்வின் முன், தமிழக அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்களான அபிஷேக் மனு சிங்வி மற்றும் வில்சன் ஆகியோர் ஆஜராகி சில கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அதன்படி, தமிழ்நாடு அரசின் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிடக் கோரிய ரிட் மனு, நவம்பர் 10ஆம் தேதி விசாரணைக்காக பட்டியலிடப்பட்டது.

அவ்வாறே, நவ. 10 அன்று – ஆளுநர் ரவிக்கு எதிராக தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

"மசோதாக்களை கிடப்பில் போட்டு அரசின் செயல்பாடுகளை ஆளுநர் முடக்கி வைக்கிறார். பணி நியமனம் தொடங்கி எந்த ஒரு கோப்புகளுக்கும் அனுமதி கொடுக்க ஆளுநர் மறுப்புத் தெரிவிக்கிறார்; கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் கோப்புகளைக் கூட கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார் என தமிழக அரசு மூத்த வழக்கறிஞர்கள் தனது வாதத்தை முன்வைத்தனர்.

அப்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் ஏ.எம்.சிங்வி, பி.வில்சன் ஆகியோர், "ஊழல் வழக்கில் சிக்கியுள்ள அரசு ஊழியர்கள் மீது நடவடிக்கை கோரும் கோப்பு, டி.என்.பி.எஸ்.சி. நியமனங்கள், சிறைவாசிகளை முன்கூட்டியே விடுதலை செய்வதற்கான ஒப்புதல் கோரும் கோப்புகளைக் கூட ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளார்" என்று தெரிவித்தனர்.

"மக்களின் பொது சுகாதாரம் தொடங்கி உயர் கல்வி விவகாரம் வரை எந்தக் கோப்புகளுக்கும், மசோதாக்களுக்கும் ஆளுநர் பதில் அளிக்கவில்லை என்றனர்.

அப்போது உச்சநீதிமன்றம், "அரசியல் சாசன சட்டப்பிரிவு 200ன் படி மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதல் கோரி அனுப்பப்படும் கோப்புகள் மீது அவர் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் முடிவு எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியது. இதனை இன்னும் விவரித்து தலைமை நீதிபதி சந்திரசூட் கூறுகையில், "ஆளுநர் ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கலாம். ஒருவேளை அது நிதி மசோதாவாக இல்லாமல் இருந்தால் முடிவை நிறுத்தி வைக்கலாம் அல்லது அதில் திருத்தம் மேற்கொள்ளப் பரிந்துரைத்து அரசுக்குத் திருப்பி



அனுப்பலாம் அல்லது சட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கலாம். ஆனால், எதுவுமே செய்யாமல் காலவரையின்றி மசோதாக்களை கிடப்பில் போட முடியாது" என்றார்.

அப்போது வழக்கறிஞர் சிங்வி, "அதையே நாங்களும் கூறி வருகிறோம். மசோதாக்கள் மீது முடிவெடுக்கும்படி நாங்கள் 2020 ஜனவரி தொடங்கி இப்போது வரை ஆளுநரிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறோம். தவறு செய்தோர் மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாக சில கோப்புகளில் கையெழுத்திட வேண்டி வருகிறோம். சில கைதிகளை நன்னடத்தையின் அடிப்படையில் தண்டனைக் குறைப்புக்கு பரிந்துரைக்க வேண்டி வருகிறோம். ஆனால், அவர் எதையுமே செய்வதில்லை" என்றார்.

அவரைத் தொடர்ந்து வழக்கறிஞர் வில்சனும் வாதிட்டார். அப்போது அவர், "ஆளுநர் செயல்படாமல் இருப்பதால் டி.என்.பி.எஸ்.சி.யில் 14 இடங்களில் தலைவர் உள்பட 10 பதவிகள் காலியாக உள்ளன. எத்தனையோ முறை கோரியும் ஆளுநர் அந்தக் கோப்பை இதுவரை கிடப்பில் போட்டிருக்கிறார் என்று கவலை தெரிவித்தார்.

அதையடுத்து, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.

அந்த நோட்டீஸில், 'மக்களின் உரிமைகளைச் சிதைக்கும் வகையில் ஆளுநர் செயல்படுகிறார்' என்ற தமிழக அரசின் மனுவுக்கு பதிலளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இம்மாதம் 20ஆம் தேதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும்போது மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல் அல்லது அவருக்குப் பதிலாக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத் தில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும்" என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் – ஆளுநர் ஆர்.என்.ரவி அவசரமாக, நீண்ட காலமாக கிடப்பில் வைத்திருந்த, 10 மசோதாக்களையும் கடந்த 13ந்தேதி அரசுக்குத் திருப்பி அனுப்பியதும் –

இதையடுத்து தமிழ்நாடு சட்டப்பேரவை நேற்று முன்தினம் (சனிக்கிழமை) அவசரக் கூட்டமாக கூட்டப்பட்டு ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வேந்தர்களை அரசே நியமிக்கும் சட்ட மசோதாக்கள் உள்பட 10 மசோதாக்களையும் மீண்டும் சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு நேற்று முன்தினம் மாலையே அனுப்பி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

---

### இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட

## நாகை - இராமநாதபுரம் மீனவர்கள் 22 பேர் விடுதலை!

### இலங்கை நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு, நவ. 20 –

கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படையினர் நடுக்கடலில் கைது செய்வதும், படகுகள் உள்ளிட்ட உபகரணங்களை பறிமுதல் செய்வதும் தொடர்கதையாகி வருகிறது. இந்த விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.க., அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சியத்துடன் இருந்து வருகிறது.

இருப்பினும் தமிழ்நாடு அரசின் உரிய அழுத்தத்தின் பேரில், மீனவர்கள் படிப்படியாக மீட்கப்பட்டு வருகின்றனர். அந்தவகையில், அண்மையில் கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட நாகை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 22 மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்பேரில், இந்த மீனவர்களை இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்தது.

---

## உதகை மலை ரயில் சேவை மீண்டும் தொடங்கியது!

உதகை, நவ. 20 –

மேட்டுப்பாளையத்தில் இருந்து நேற்று காலை உதகையை நோக்கி ரயில் புறப்பட்டது. மேட்டுப்பாளையம் – குன்னூர் இடையிலான மலை ரயில் போக்குவரத்து பத்து நாட்களுக்கு பிறகு மீண்டும் துவங்கியது. கடந்த பத்து நாட்களுக்கு மேலாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மலை ரயில் பாதை அமைந்துள்ள பல்வேறு இடங்களில் மரங்கள் முறிந்தும், மண்சரிவு ஏற்பட்டும் சேதமடைந்திருந்தது.

இந்நிலையில், சேதமடைந்த ரயில் தண்டவாளங்கள் சீரமைக்கும் பணிகள் முடிவுற்ற நிலையில் பத்து நாட்களுக்கு பிறகு நேற்று மேட்டுப்பாளையம் – குன்னூர் இடையிலான மலை ரயில் சேவை மீண்டும் துவங்கியது. பத்து நாட்கள் இடைவேளைக்கு பிறகு மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இருந்து முன்பதிவு செய்த 180க்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகளுடன் மலை ரயில் புறப்பட்டு குன்னூர் சென்ற நிலையில் அதில் மிகுந்த உற்சாகத்துடன் பயணிகள் பயணித்துள்ளார்.

---

### தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும்

# 10 சட்ட மசோதாக்களுக்கும் - ஆளுநர் ஒப்புதல் அளிக்கவேண்டும்!

## சட்டப்பேரவையில் - பேரவைத் தலைவர் மு.அப்பாவு வலியுறுத்தல்!

**சென்னை, நவ. 20 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், விவாதங்களின் நடுவே குறுக்கிட்டு விளக்கமளித்த பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும் 10 சட்ட மசோதாக்களுக்கும் மறுப்பேதும் தெரிவிக்காமல் ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.**

*சட்டப்பேரவையில் - பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், இதுகுறித்து குறிப்பிட்டதாவது:-*

இந்த அவைக்கு நானும் சில விவரங்களைச் சொல்ல வேண்டும். நம்முடைய ஆளுநர் அவர்கள் அதை "I withheld assent" என்று போட்டிருக்கிறார்கள். அப்படியென்றால், திரும்ப இந்த சட்டமன்றத்தில் விவாதிப்பதற்கோ, மறு ஆய்வு செய்வதற்கோ உரிமை இருக்கிறதா என்கின்ற கோணத்தில்தான், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்களின் கேள்வி நியாயமான கேள்விதான். அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், NEET தேர்வில் நம்முடைய நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுமாதிரி, நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் இதேபோன்று "I with hold assent" என்று சொல்லி, திருப்பி அனுப்பியபோது, அப்போது நம்முடைய சட்டத் துறை அமைச்சராக இருந்த சி.வி.சண்முகம் அவர்கள், நாங்கள் அதற்கு மத்திய அரசிடம், என்ன காரணத்திற்கு withhold என்று நீங்கள் அனுப்பினீர்கள் என்ற விவரத்தைக் கேட்டிருக்கிறோம். அந்த விவரம் வந்திருந்தால் அந்த Billஐ மறு ஆய்வுக்கு நாங்கள் இந்த சட்டமன்றத்திற்கு கொண்டு வந்திருப்போம் என்று அவர்கள் சொன்னபோது, அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இன்றைய முதல்வர் அவர்கள், 2019 ஜூலை மாதம் 17 ஆம் தேதி, தெளிவாகச் சொன்னார்கள், withhold என்று சொன்னதை, Article 201 of the Indian Constitutionன்படி, மறு ஆய்வு செய்வதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு உரிமை இருக்கிறது.

சட்டமன்றம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டவர் முதலமைச்சராக இருக்கின்றார். அந்த அவைக்கு முழு இறையாண்மை இருக்கின்றது, மாண்பு இருக்கின்றது, மக்கள் பிரச்சி



னையை எத்தனை முறை வேண்டுமென்றாலும் கொண்டு வரலாம் என்பதற்கு முதலமைச்சர் அவர்களும் அப்போது தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். இந்த அவையின் அவைக்குறிப்பில் அது இருக்கிறது. இன்னும் அதற்குமேல் சொல்ல வேண்டுமென்றால், withhold என்று சொல்லி, அதை நிறுத்தி வைத்திருப்பதாக அவர் சொன்னால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மறு ஆய்வு செய்யுங்கள் என்றோ, மறு ஆய்வு செய்யக்கூடாது என்றோ எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மறு ஆய்வுக்கு உட்பட்டது, மறு ஆய்வு செய்யக்கூடாது என்றும் சொல்லவில்லை. இந்த இடத்தில் இந்தப் பேரவைக்கு மிகப் பெரிய மாண்பு இருக்கின்றது. பேரவை விதி 286ன்படி இந்திய அரசியலமைப்பு சட்டத்திலோ அல்லது பேரவை விதிகளிலோ குறிப்பிட்டு சொல்லப்படாத பொருள் குறித்து சட்டமன்றத்தில் இவ்வாறு அரசு ஒரு தனித் தீர்மானம் கொண்டு வந்தால், அந்த இடத்தில் சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையில்,

அதாவது, இந்தச் சட்டமன்றப் பேரவை எனக்குத் தந்திருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்தச் சட்டப் பேரவையிலே மறு ஆய்வுக்கு சபாநாயகர் என்ற முறையில் நான் அனுமதி அளித்துத்தான் இதுவரை இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதில் மாறுபட்ட கருத்து யாருக்கும் இல்லை. மறு ஆய்வுக்கு உட்பட்டதுதான். அது திருப்பி அனுப்பப்பட்டது எந்தக் காரணமும் இல்லாமல். உள்நோக்கத்தோடு என்றுதான் அதில் பொருள்கொள்ள வேண்டும். காரணம், கல்வியில், உயர் கல்விக்கு என்று சொல்லி ஒரு சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. அது எந்த இறையாண்மைக்கு எதிரானது? இது எந்த அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது? இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்தப் பல்கலைக்கழகத்திற்கும் ஒன்றிய அரசிடமிருந்து தற்போது மானியமே வழங்கப்படுவதில்லை.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 3 ஆண்டுகளாக ஒரு பைசாகூட வழங்கப்படவில்லை. இது எல்லோருக்கும் தெரியும். நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே, இந்த நிலையிலே முழுவதுமாக நம்முடைய அரசின் முதலமைச்சர் அவர்கள், நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் நம்முடைய வரி வருவாயின் மூலம் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், 3 வருடங்களுக்குப் பிறகு மொத்தமாக அவர்கள் withhold என்று எழுதி அனுப்பியதில், உள்நோக்கம் இருப்பதாகத்தான் அனைவருமே வெளிப்படையாகச் சொல்கிறார்கள். நம்முடைய பாரதிய ஜனதா கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்கள் சரியான பதில் இல்லாத காரணத்தால் வெளிநடப்பு செய்திருக்கிறார். நான்கூட அவர்கள் வெளிநடப்பு செய்வதைப் பார்த்தால், தமிழ்நாட்டிலே யாருமே ஆளுநருடைய செய்கைக்கு சரி என்று சொல்லவில்லை. இவர்கள் சொல்லித்தான் அவர் செயல்படுகிறாரோ என்கின்ற ஓர் அர்த்தம் வந்துவிடும், இவர் வெளிநடப்பு செய்வதாலேயே அப்படி ஒரு நோக்கம் வந்துவிடும். ஆகவே, இவருக்கு தமிழ்நாட்டின்மீது அக்கறை இருக்கிறதா என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தனித் தீர்மானம் மறு ஆய்வுக்கு உட்பட்டது.

10 சட்டமுன்வடிவுகளையும் ஒரு fullstop, comma இல்லாமல், NEET விலக்கு மசோதா எவ்வாறு மீண்டும் நிறைவேற்றி அனுப்பப் பட்டதோ, online Rummy தடை மசோதா எவ்வாறு மீண்டும் நிறைவேற்றி அனுப்பப் பட்டதோ, அதேபோன்று இந்த 10 மசோதாக்களும் மீண்டும் அனுப்பப்படும். அவற்றிற்கு ஆளுநர் ஒப்புதல் தர வேண்டும். இதுதான் சட்டம்.

பேரவைத் தலைவர் அவர்கள், குறிப்பிட்டார்.

---

### காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வாக்குறுதிகளை காப்பியடிக்கிறது!

# பா.ஜ.க.வுக்கென தனித்த கொள்கை எதுவும் இல்லை!

## அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிரச்சாரம்!

*ஜெய்ப்பூர், நவ. 20 -*

*ராஜஸ்தான் மாநிலத்தில் வரும் 25ம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன. பிரசார பொதுக்கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பா.ஜ.க.வுக்கு என எந்த கொள்கையும் இல்லை என்றும், தேர்தலுக்காக காங்கிரஸின் வாக்குறுதிகளை காப்பியடிக்கிறது என்று விமர்சித்துள்ளார்.*


*ராஜஸ்தான் மாநிலத்தில் முதலமைச்சர் அசோக் கெலாட் தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கிறது. இம்மாநிலத்தில் மொத்தம் 200 தொகுதிகள் இருக்கின்றன. இந்நிலையில் மாநிலத்திற்கு வரும் 25ம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெறுகிறது. இதில் எப்படியா*



*வது ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள காங்கிரஸ் பல்வேறு வியூகங்களை வகுத்துள்ளது.*

*எனவே காங்கிரஸ் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறது. பரத்பூர் மாவட்டத்தின் வயர் சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்று பேசிய அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பா.ஜ.க.வுக்கு என எந்த கொள்கையும் இல்லை என்றும், தேர்தலுக்காக காங்கிரஸின் தேர்தல் வாக்குறுதிகளை பா.ஜ.க. காப்பியடிக்கிறது என்றும் விமர்சித்துள்ளார்.*

---



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 20-11-2023

# ஆளுநரின் தொங்கு சதை அ.தி.மு.க.

எந்தக் காரணமும் சொல்லாமல் இரண்டாண்டு காலம் தமிழ்நாட்டுச் சட்ட முன்வடிவுகளை கிண்டி மாளிகைக்குள் வைத்து பூட்டி வைத்திருந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, உச்சநீதிமன்றம் உச்சம் தலையில் கொட்டத் தொடங்கியதும் - எந்தக் காரணமும் இல்லாமல் திருப்பி அனுப்பி இருந்தார். அது கிடைத்த மூன்றாவது நாளே தமிழ்நாடு சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி - அதே சட்ட முன்வடிவுகளை திருத்தம் ஏதுவும் செய்யாமல் நிறைவேற்றி அனுப்பிவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

"கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் நம்மை - இந்திய அரசியல் சட்டம் வழங்கிய அதிகாரத்தின் மையமாக இருந்து சட்டமியற்றும் இந்த சட்டமன்றத்தை - தடுக்கும் சக்தி ஒன்று முளைக்குமானால் - இந்தச் சூழ்நிலை என்பது இந்திய ஜனநாயகத்தை மிக மோசமான வகையில் கொண்டு செலுத்திவிடும் என்ற அச்சத்துடன்தான் உங்கள் முன்னால் நிற்கிறேன்" என்று தொடங்கிய முதலமைச்சர் அவர்கள், "நாம் எப்போதும் சட்டத்தின் வழி நடப்பவர்கள். எனவே, அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 200-ன்படி அவர் எந்தக் காரணமும் குறிப்பிடாமல் திருப்பி அனுப்பி வைத்துள்ள 10 சட்டமுன்வடிவுகளையும் நிறைவேற்றித் தருமாறு நூற்றாண்டு கண்ட இச்சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களை தங்கள் வாயிலாகக்கேட்டுக் கொள்கிறேன்" என்று முடித்தார் முதலமைச்சர் அவர்கள்.

**வாக்கெடுப்பின் போது இருந்த அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு முதலமைச்சரின் தனித்தீர்மானமும், அமைச்சர்கள் முன்மொழிந்த சட்டமுன்வடிவுகளும் பேரவையில் அனைத்து உறுப்பினர்கள் ஆதரவுடன் முழுமையாக நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில் நவம்பர் 18 - 2023 என்பது மிகமிக முக்கியமான நாளாகும். அரசியலமைப்புச் சட்டத்தைக் காக்கவும் - மக்களாட்சி மாண்பைக் காக்கவும் - மாநில சுயாட்சித் தத்துவத்தை மீட்டெடுக்கவும் - ஆளுநர்களின் வாலை நறுக்கவும் அந்த நாள் முக்கியமான நாளாக அமைந்துவிட்டது.**

வழக்கம்போல்பா.ஜ.க.-வெளிநடப்புசெய்தது. இதுஎதிர்பார்த்ததுதான். ஏனென்றால் ஆட்டுவிப்பவர்கள் அவர்களே. பா.ஜ.க. தலைமை சொல்லாமல் ஆளுநர் ஆர்.என்.ரவி இவ்வளவு ஆடமாட்டார்.

பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க.வும் வெளிநடப்பு செய்துவிட்டது. இதுவும் ஆச்சர்யம் அளிக்கவில்லை. ஆட்டுவிப்பது பா.ஜ.க. என்றால், ஆட்டம் போடுவது ஆளுநர் மட்டுமல்ல, அ.தி.மு.க.வும்தான் என்பதை பழனிசாமி நிரூபித்துவிட்டார்.

**முதலமைச்சர் கொண்டு வந்த சிறப்பு தனித்தீர்மானத்தின் மீது அ.தி.மு.க. சார்பில் பேசியவர் பழனிசாமி. அப்போது ஆளுநரை விமர்சித்தே பேசவில்லை. தீர்மானம் கொண்டு வந்த தி.மு.க. அரசைக் கண்டித்துதான் பேசிக் கொண்டு இருந்தார். இதுவே அவரது உண்மையான உள்நோக்கம் என்ன என்பதைக் காட்டி விடும்.**

**"சென்னாரெட்டி காலத்தில் இருந்து ஆளுநர்கள் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள்" என்று பழனிசாமி பேசி இருந்தால் அவரை ஜெயலலிதா வழியில் நடப்பவராக ஏற்றுக் கொள்ளலாம். 'மாநில அரசுகளை ஆளுநர்கள் இப்படித்தான் மறைமுகமாக ஆட்சி செலுத்தப் பார்க்கிறார்கள்' என்று சொல்லி இருந்தால் அவரது கட்சிக்கு 'அண்ணா' என்ற பெயர் இருப்பதற்கு பொருத்தமாகப் பேசுகிறார் என்று மகிழ்ச்சி அடையலாம். இவை அனைத்தையும் விட்டுவிட்டு அதே கிண்டி மண்டப ஸ்கிரிப்டை எடுத்து வாசித்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. இதை விட மோசடித்தனமான நிலைப்பாடு இருக்க முடியாது.**

'நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் போது தனித்தீர்மானம் எதற்கு?' என்று சட்டமேதை பழனிசாமி கேட்கிறார். 'அவர் தான் மூச்சு விடுகிறாரே, பிறகு எதற்கு ஆபரேஷன்?' என்று கேட்பதைப் போல இருக்கிறது பழனிசாமியின் வாதம்.

'சட்டமுன்வடிவுகளை திருப்பி அனுப்பாமல் வைத்திருக்கிறார்' என்று வழக்குப் போட்டதும், உடனே திருப்பி அனுப்புகிறார் ரவி. அதாவது திருப்பி அனுப்பிவிட்டு தப்பிக்கப் பார்க்கிறார் ரவி. இதனைத்தான் சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டம், நாட்டுக்கு அம்பலப்படுத்தி இருக்கிறது. 'வழக்குப் போட்டதும் தான் திருப்பி அனுப்புவீர்களா?' என்று ஆளுநரைக் கேட்பதற்கு பழனிசாமிக்கு துப்பு இல்லை. தீர்மானம் போட்டவர்களைப் பார்த்து பிராண்டுகிறார்.

வெளிநடப்புச் செய்வதற்கு பழனிசாமி கண்டுபிடித்த காரணம் தான் அதை விட மோசடியானது. பல்கலைக் கழகத்துக்கு ஜெயலலிதா பெயரை வைத்தோம், அதை நீக்கிவிட்டது தி.மு.க. அரசு என்கிறார் அவர். சட்டமன்றத்தில் பேசும் போதாவது தெரிந்து கொண்டு வர வேண்டாமா? 'திராவிடம் என்றால் என்ன?' என்று தெருவில் நிறுத்திக் கேட்டார்கள். 'நான் புராணங்களை படித்தது இல்லை' என்றார். அது தெரு. எதுவேண்டுமானாலும் சொல்லலாம். பேரவையில் பேசும் போது அறிந்து வர வேண்டாமா?

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நாம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்காமல் இருந்தார் மாண்புமிகு ஆளுநர் அவர்கள். "I withhold assent" அதாவது, - தான் அனுமதியை நிறுத்திவைத்துள்ளதாகக் குறிப்பிட்டு, கடந்த 13.11.2023 அன்று திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றார். இதில் இரண்டு சட்டமுன்வடிவுகள் அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்டவை ஆகும்.

★. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு (ச.மு.எண்.02/2020) -

★ 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவஅறிவியல் பல்கலைக் கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (ச.மு.எண்.12/2020) இவை இரண்டும் அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டு ஆளுநர் மாளிகை ஒப்புதல் வழங்காதவை ஆகும்.

10 சட்டமுன்வடிவுகளில், 2 சட்ட முன்வடிவுகள் 2020ஆம் ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளுக்கும் மேலாக ஆளுநர் அவர்கள் தன்வசம் வைத்துக் கொண்டுவிட்டு, தற்போது ஒப்புதல் எதுவும் அளிக்காமல் திருப்பி அனுப்பியுள்ளார். இதுவே பழனிசாமிக்குத் தெரியவில்லை. ஆளுநருக்கு எதிராகப் பேசினால், பா.ஜ.க. கோபித்துக் கொள்ளும் என்று பாதம் தாங்கி பழனிசாமி பயந்துவிட்டார். அதனால்தான் தீர்மானம் கொண்டு வந்த தி.மு.க.வையே விமர்சித்துப் பேசிக் கொண்டு இருந்தார்.

மீன்வளப் பல்கலைக் கழகத்துக்கு ஜெயலலிதா பெயர் வைக்கவும் ஆளுநர் ஒப்புதல் அளிக்கவில்லை. ஆளுநர் திருப்பி அனுப்பிய பத்து சட்டமுன்வடிவுகளில் அதுவும் ஒன்று. அதுவே பழனிசாமிக்குத் தெரியவில்லை. பழனிசாமி கண்ணை பா.ஜ.க. பயம் மறைப்பதால் தெரியவில்லை.

**ஆளுநருக்கு பழனிசாமி சேவகம் செய்வதற்கு மிக முக்கியமான காரணம், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகளுக்கு அனுமதி தராமல் வைத்திருக்கிறார் 'மகா யோக்கியர்' ஆர்.என். ரவி. அதனால்தான் ஆளுநரின் பாதத்தையும் சேர்த்துத் தாங்குகிறார் பழனிசாமி.**

சட்ட மசோதாக்களை ஆளுநருக்கு மீண்டும் அனுப்புவதில் அ.தி.மு.க.வின் நிலைப்பாடு - கொள்கை தெரிந்துவிட்டது!

# 'பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது!'

## அ.தி.மு.க. வெளிநடப்பை அடுத்து - அவை முன்னவர் துரைமுருகன் விளக்கம்!

**சென்னை, நவ. 20 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், 10 சட்ட மசோதாக்களை ஆளுநருக்கு மீண்டும் அனுப்புவது என, முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசிய போது, உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டினைக் கூறி, பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.**

**அப்போது எழுந்து விளக்கமளித்த அவை முன்னவர் துரைமுருகன் அவர்கள், "இப்பிரச்சினையில் அ.தி.மு.க. வின் கொள்கை என்ன, இலட்சணம் என்ன என்பதைத் தெரிவித்து விட்டா ர்கள். பூனைக் குட்டி வெளியே வந்துவிட்டது" என்று குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**எடப்பாடி பழனிச்சாமி:** இந்த அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறது. அந்த வழக்கில் தீர்ப்பு வருவதற்குமுன் ஏன் இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்? அந்த வழக்கி லேயே, நல்ல தீர்ப்பு கிடைத்துவிட்டால், நீங்கள் எண்ணியவாறு தீர்ப்பு கிடைக்கப் பெற்றுவிட்டால், இந்தச் சிறப்புக் கூட்டம் கூட்டுவதற்கு அவசியம் இல்லாமல் போயிருக்கும். அவசர அவசரமாக ஏன் இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, இந்தச் சட்ட முன்வடிவுகளை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்பது குறித்து மக்களிடைய சந்தேகம் ஏற்படுகிறது. (குறுக்கீடு)

**அவை முன்னவர் துரைமுருகன்:** இதில் ஒரு சின்ன பிரச்சினை. தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாடு சரியில்லை; satisfaction இல்லை; திருப்திகரமாக இல்லை என்று உச்சநீதிமன்றத்தில் சொன்னோம். அவ்வாறு சொன்னவுடனேயே, அதுவரையிலும் மாதக் கணக்கில் நிலுவையில் வைத்திருந்தவர், உடனேயே அவற்றை அனுப்பிவிட்டார். அந்தக் கோப்புகளை சபாநாயகருக்கு அனுப்பிவிட்டார். தற்போது கோப்புகளை திருப்பி அனுப்பிவிட்ட நிலையில், நாளை மறுநாள் வழக்கு விசாரணைக்கு வரும். அப்போது என்ன சொல்வார் என்றால், நான் கோப்புகளை திருப்பி அனுப்பிவிட்டேன் என்று சொல்லிவிடுவார். கோப்புகளை அனுப்பிவிட்டார்போலும் என்று உச்ச நீதிமன்றமும் நினைக்கக்கூடும். மறுபடியும் அந்தக் கோப்புகள் போகாது. அதனால்தான், சட்டத்தை மிகவும் clear cut ஆகவே சொல்கிறேன்.

The Governor may give assent to the Bill; ஏற்பிசைவு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. The Governor may give assent to the bill or withhold the bill or return the bill to the Legislature with his message or send the bill for consideration of the President. If the bill is returned to the Legislature இதைத்தான் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். If the bill is returned to the Legislature with message for reconsideration and if it is passed again with his message or without his message, the Governor thereafter is bound to accord to his assent to the bill. அதாவது, அவர் திருப்பி அனுப்பும் போது, அதில் ஏதேனும் யோசனை சொல்லியிருந்தாலோ அல்லது சொல்லாமல் அனுப்பியிருந்தாலோ, இந்த மன்றம் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளலாம்; ஏற்றுக்கொள்ளாமல் பழைய மாதிரியே அனுப்பலாம்; அப்படி அனுப்பினால், அவர் நிச்சயமாக அதற்கு assent கொடுத்தே ஆக வேண்டும். ஆகவே, தற்போது வலையில் சிக்கிவிட்டார். எனவே, நாங்கள் திருப்பி அனுப்பிவிட்டோம் என்று நாளைக்கு உச்ச நீதிமன்றத்தில் சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, அடுத்து வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்பாகவே, நாம் நிறைவேற்றிய இந்தச் சட்டமுன்வடிவுகள் ஆளுநர் மாளிகை ராஜ் பவனில் இருக்கும். அவற்றில் கையெழுத்திட்ட பிறகே அவர் டில்லிக்குச் செல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

தனித் தீர்மானம் ஏற்கெனவே கொண்டு வந்து, அதிலே அவர்களுடைய கருத்துகளையெல்லாம் பேசிவிட்டார்கள். இப்போது அந்த 10 மசோதாக்கள் ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பப்பட்டதை நாம் இதே அவையில் வைத்து மீண்டும் நம்முடைய ஆளுநர் அவர்களுக்கு அனுப்புகின்றோம். இதில் அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. எதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அந்த நிலைப்பாட்டை எடுத்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அதுவும், அம்மையார் ஜெயலலிதா பெயர் கொண்ட பல்கலைக்கழகத்தினுடைய... என்று சொன்னார்கள். நிச்சயமாக அந்தப்...

இன்னும் ஆளுநர் அவர்கள் அனுமதி தரவில்லை. இன்னும் நிலுவையில் இருக்கின்ற 10 மசோதாக்களில் இதுவும் ஒன்றாகத்தான் இருக்கின்றது. இதை இன்றைய ஆட்சியில் இருக்கின்றவர்கள் (குறுக்கீடு)

**(அப்போது பேசிய எடப்பாடி பழனிச்சாமி, "நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்" என்று கூறியதைத் தொடர்ந்து, பேரவையில் இருந்து அ.தி.மு.க.வினர் வெளியேறினர்.)**

**அவை முன்னவர் துரைமுருகன்:** எதிர்க்கட்சி தலைவர் அவர்கள், அம்மையார் ஜெயலலிதா... என்று ஓர் உண்மைக்கு மாறான செய்தியை இங்கு சொல்லிவிட்டு, அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். வெளிநடப்பு செய்ததன் நோக்கம், அந்த அம்மையாருடைய... என்பதல்ல; பெயரை எடுக்காமலேயே அப்படி சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இவர்கள் BJPலிருந்து வெளியே வந்துவிட்டாலும், அவர்களுக்கு உள்ளூர (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நீரோட்டம் இருக்கிறது. ஆகையினால், கவர்னரை எதிர்த்தால், அது மோடியை எதிர்த்ததுபோல் ஆகும். BJPஐ எதிர்த்ததுபோல் ஆகும். எனவே, இல்லாத காரணத்தை சொல்லிவிட்டு, வெளியே போயிருக்கிறார்கள்.

கிராமத்தில் சொல்வார்கள்; 'பூனைக் குட்டி வெளியே வந்துவிட்டது' என்று, அ.தி.மு.க.வினுடைய கொள்கை என்ன, இலட்சணம் என்ன என்பதைத் தெரிவித்துவிட்டார்கள்.

**அமைச்சர் முனைவர் க.பொன்முடி:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பெயரை எடுத்துவிட்டதாக சொன்னார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான், மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டப்பட்டது. அந்தப் பெயர்சூட்டி, திறந்து வைத்தவரே கலைஞர் அவர்கள்தான் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

## காஞ்சிபுரத்தில் மாணவர் அணி சார்பில் பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கு போட்டிகள்!

*காஞ்சிபுரம், நவ. 20 -*

*தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கினங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் அறிவிப்பின்படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப்போட்டி 17- 11- 2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் மதுராந்தகம் சூணாம்பேடு சாலையில் பொலம்பாக்கம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சியை சித்தாமூர் ஒன்றிய குழு தலைவரும் மேற்கு ஒன்றிய கழக செயலாளருமான ஏழுமலை துவக்கி வைத்தார். வள்ளுவம் போற்றிய கலைஞர், திராவிடத்தின் எழுச்சி கலைஞர், இந்திய ஜனநாயகத்தில் கலைஞரின் பங்கு என்ற தலைப்புகளில் கட்டுரை போட்டியும் நவீன தமிழ்நாட்டின் சிற்பி, கலைஞர் மகளிர் மாண்பு காத்த கலைஞர், கலைஞரும் சுயமரியாதையும் என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும் நடைபெற்றது.*

*மேற்படி போட்டிகளில் 76 கல்லூரி மாணவர்களும் 240 பள்ளி மாணவ மாணவிகளும் கலந்து தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். அனுபவமிக்க நடுவர்களால் மாணவர்களின் திறமையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, முதல் பரிசாக நான்கு பேருக்கு ரூபாய் 10,000/ வீதம் ரூ.40,000/மும், இரண்டாம் பரிசாக நான்கு பேருக்கு ரூபாய் 7000 வீதம் ரூ.28,000 மும், மூன்றாம் பரிசாக ரூபாய் 5000 வீதம் நான்கு பேருக்கு ரூபாய் 20,000 மும், நான்காவது மற்றும் ஆறுதல் பரிசாக ரூபாய் 26 பேர்களுக்கு ரூ.1000 வீதம் ரூ.26,000 என மொத்தம் 1,14,000 ரூபாய் பரிசுத் தொகையும் மற்றும் சான்றிதழ், மெடல் நினைவுப்பரிசு ஆகியவற்றையும் வழங்கி வெற்றிபெற்ற மாணவர்களை வாழ்த்திப் பேசினார்.*





தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, காடல்குடி ஊராட்சி, மாவிலோடை ஊராட்சி, என்.ஜெகவீரபுரம் ஊராட்சி, பூதலப்புரம் ஊராட்சி, கந்தசாமிபுரம் ஊராட்சி மற்றும் மாதலப்புரம் ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற மக்கள் களம் மக்களின் குறை கேட்டல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, விவசாயிகளுக்கு இடுபொருட்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து பெட்டகம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும்,தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான திருமிகு பெ.கீதா ஜீவன்,சட்டமன்ற உறுப்பினர் ஜிவி. மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் லெட்சுமிபதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் திரு.ஜெகன் பெரியசாமி,புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை நகர் தஞ்சாவூர் மானாமதுரை புறவழிசாலை திட்டப்பணிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் ஆஷாஅஜித், நகர்மன்ற தலைவர் துரைஆனந்த், காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து, ஒன்றியக்குழுதலைவர் திருமதி மஞ்சுளா பாலசந்தர் ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில்

# உயர்கல்வி மாபெரும் வளர்ச்சி பெற்றது - தலைவர் கலைஞர் ஆட்சியில்தான்!

## சட்டப் பேரவையில் - உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆணித்தரமான விளக்கம்!

*சென்னை, நவ. 20-*

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தின் போது குறுக்கிட்டு விளக்கமளித்த உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, "தமிழ்நாட்டில் உயர் கல்வி மாபெரும் வளர்ச்சி பெற்றது. தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான்" என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

சட்டப் பேரவையில் - அமைச்சர் முனைவர் க. பொன்முடி குறிப்பிட்டதாவது:-

முனைவர் க. பொன்முடி: பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவெனில், நீங்கள் ஆட்சியிலே இருந்தபோது சூரப்பா அவர்களை கொண்டு வருவதை எதிர்த்து சொன்னீர்கள். அப்போது நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும் நாங்களும் உங்களுடைய கோரிக்கையை ஏற்று ஆதரவளித்து, சூரப்பாவின்மீது வழக்கு போடுவதற்கு நாங்களும் உறுதுணையாக இருந்தோம் என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. அந்த சூரப்பாவினுடைய வழக்கு நீங்கள் போட்டதைப் போலவே இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, எந்த நல்ல நிகழ்வுகளாகயிருந்தாலும், காலத்திற்கேற்ப—அப்போதிருந்த ஆளுநர்கள் எப்படி செயல்பட்டார்கள்; இப்போதிருக்கிற ஆளுநர் அவர்கள் எப்படி செயல்படுகிறார் என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல; இப்போதிருக்கிற ஆளுநர் அவர்கள் மிக அதிகமாக பல்கலைக்கழகங்களினுடைய விவகாரங்களிலே தலையிட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினாலேதான்,தமிழக முதலமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கட்சி வேறுபாடுகள் இல்லாமல் இதை அனைவரும் நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால், அரசமைப்புச் சட்டத்திலே சொல்லப்பட்டி ருக்கிறது; தமிழ்நாடு அரசுக்கு இந்த உரிமைகளெல்லாம் இருக்கின்றன. குறிப்பாக, இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 246ன்கீழ், ஏழாவது அட்டவணை, பட்டியல் II மாநிலப் பட்டியல், வரிசை 32ன்படி, மாநில அரசு பல்கலைக்கழகத்தை நிறுவுதல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் களைத்தல் ஆகியவை மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது. அதைத்தான் நிறுவ வேண்டும் என்ற எண்ணத்தோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் இன்றைய ஆளுநர் அவர்களுடைய செயல்பாடுகளையெல்லாம் இங்கே நண்பர்களெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். திரு. சங்கரய்யா அவர்களுக்கு முனைவர் பட்டம் கொடுக்க வேண்டும் என்று செனட் நிறைவேற்றி அனுப்பிய பிறகும், ஆளுநர் அவர்கள் மறுத்ததிலிருந்து உங்களுக்கு அவர் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். பல்கலைக்கழகங்களில் அரசியல் செய்து கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது; அதுபோன்று இருக்கக் கூடாது என்ற காரணத்தினால்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. நம்மை அரசியல் செய்கிறோம் என்று சொல்கிறார்கள்; அதெல்லாம் கிடையாது. அவை முன்னவர் அவர்கள் இங்கே சொன்னதைப் போல, அப்போதிருந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் 3 பேர் இருக்கிற குழுதான் துணை வேந்தரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அனுப்பும். அதில் ஒருவரைத்தான் நியமிப்பார்கள் என்பதெல்லாம் இருந்தது. நீங்கள் சொன்னீர்கள், இந்த ஆளுநர் அவர்கள், அந்த 3 பேர், அவர்கள் நியமிப்பது மட்டுமல்லாமல், UGCலிருந்து வருகிற ஒருவரையும் நியமிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதையெல்லாம்தான் நாம் எதிர்க்கிறோம். UGC என்பது ஒரு advisory body; அவ்வளவுதானே தவிர, அவர்கள் சொல்பவர்களை நியமிக்க வேண்டும் என்பது அல்ல; பல்கலைக்கழகங்களுடையசுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் தமிழக முதலமைச்சர் அவர்கள் இதை வலியுறுத்தி சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் இருந்தபோதிலும் சரி, இப்போதும் சரி, உண்மையிலேயே இது தமிழகத்தினுடைய உயர் கல்வித் துறையின் வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும் என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

உயர் கல்வி என்று சொன்னால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கலைஞர் ஆட்சியில்தான் அதிகமான வளர்ந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் இங்கே சட்டப் பல்கலைக்கழகம் தனியாக உருவாக்கப்பட்டது. விவசாயப் பல்கலைக்கழகம் தனியாக உருவாக்கப்பட்டது. ஆகவே, பல்வேறு பல்கலைக்கழகங்களை உருவாக்கியவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி கொடுக்க வேண்டுமென்று சொன்னவரே தலைவர் கலைஞர்தான். அந்த அடிப்படையில் அவர் இருக்கின்றபோதே பல்வேறு மாவட்டங்களுக்கு மருத்துவக் கல்லூரி வழங்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் இன்றைக்கு மத்திய அரசுகூட இங்கே கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, கலைஞருடைய ஆட்சியில் உயர் கல்வி என்பது வளர்ந்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்தில் ஆரம்பக் கல்வி வளர்ந்தது; தலைவர் கலைஞருடைய காலத்தில் உயர் கல்வி வளர்ந்தது. அதனால்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்னுடைய இரண்டு கண்களிலே ஒன்று கல்வி என்று சொல்லி, இன்றும் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டு கொண்டிருக்கிறார் என்பதுதான் உண்மை. அவர்களும் செய்தார்கள்; நான் இல்லையென்று சொல்லவில்லை. அதே நேரத்தில் கலைஞர் அவர்கள் செய்ததையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இதனை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகத்தைப் பற்றி சொன்னார். அதற்கு ஏதாவது இங்கே நிதியை ஒதுக்கியிருந்தார்களா என்பதை மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களை சொல்ல சொல்லுங்கள். (குறுக்கீடு) நிதியும் ஒதுக்கப்படவில்லை; இடமும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. பெயர் வைப்பதற்காக மட்டுமே ஒன்றை அறிவித்துவிட்டு சென்றார்களே தவிர, உண்மையிலேயே அவர்கள் பல்கலைக்கழகத்தை உருவாக்கவில்லை. அந்த அடிப்படையில்தான் அவர்கள் காலத்தில் அரசுடைமையாக்கப்பட்ட அண்ணாமலை பல்கலைக்கழகத்தோடு அவை இணைக்கப்பட்டு, இன்றும் அவை சிறப்பாகச் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். ) (ஓ. பன்னீர்செல்வம், பால் மனோஜ் பாண்டியன், ஆர். வைத்திலிங்கம், கோ. ஐயப்பன் தவிர)

தலைவர் கலைஞர் பெயரையே மாற்றிவைத்தார்கள் அவர்கள். கலைஞர் கல்லூரி என்று திருவாரூர் மாவட்டத்தில் இருந்த கல்லூரியின் பெயரையே மாற்றியவர்கள் இவர்கள். இவர்கள் இப்படிப் பேசுவதற்கு எந்தவிதமான தகுதியும் இல்லை. திருவாரூரில் கலைஞர் கொண்டுவந்த கல்லூரிக்கு, கலைஞர் அரசு கலைக் கல்லூரி என்று இருந்ததை மாற்றியவர்கள் அவர்கள் என விளக்கம் அளித்தார்.

### இல்லாத அதிகாரத்தை இருப்பதாகக் கருதிக்கொண்டு

# மாநில மக்களின் நலனுக்கு எதிராகச் செயல்படுகிறார் ஆளுநர்!

## பேரவையில் சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி குற்றச்சாட்டு!

*சென்னை, நவ. 20-*

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் (நவ. 18) விவாதங்களின் நடுவே குறுக்கிட்டுப் பேசிய சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, "இல்லாத அதிகாரமெல்லாம் தமக்கு இருப்பதாகக் கருதிக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு எதிராக ஆளுநர் செயல்படுகிறார்" எனக் குற்றம் சாட்டினார்.

சட்டப் பேரவையில் - சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டதாவது:-

சட்ட மசோதாக்கள் அது நிலுவையில் இருப்பதாக அர்த்தம் அல்ல, திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. ஆளுநர் இந்த சட்டமுன்வடிவுகளை திருப்பி அனுப்பவில்லை, மாறாக, அவர் தனது ஒப்புதலை நிறுத்தி வைத்துள்ளார் என்று இன்றைக்கு பல ஊடகங்களில் சொல்வதைப்போல எதிர்க்கட்சித் தலைவரும் இன்றைக்கு சொல்கிறார்.

சட்டமன்றம் இதனை மீண்டும் ஒப்புதல் அளித்து அனுப்பி வைத்தாலும் அரசியலமைப்பு சட்டம் பிரிவு 200இன்படி அவர் ஒப்புதல் வழங்க கட்டுப்பட்டவர் அல்ல என்பதுதான் அது என்று, யாரோ தவறாக அப்படி கருத்துகளை திணித்துக்கொண்டிருக்கிறார்கள். அது ஒரு தவறான கருத்து. யாரோ ஒரு சட்ட மேதாவி அளித்த ஆலோசனையின்படி கெட்டிக்காரத்தனமாக செயல்படுவதாக நினைத்துக்கொண்டு இப்படி ஒரு குறிப்புரையை அவர் எழுதியுள்ளார் என நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டத்தின் ஓட்டைகளுக்குள் ஒளிந்து கொண்டு, இல்லாத அதிகாரத்தை இருப்பதாகக் கருதிக் கொண்டு, மாநில மக்களின் நலனுக்கு எதிராக செயல்படுபவருக்கு இதற்கான சட்ட பின்புலத்தை, வரலாற்றை கொஞ்சம் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

1.8.1949 அன்று நடைபெற்ற அரசியலமைப்பு சட்ட விவாதத்தின்போது பேராசிரியர் ஷிப்பன் லால் சக்ஸேனா அவர்கள் ஒரு அச்சத்தை வெளிப்படுத்துகிறார். அதாவது ஆளுநர் என்பவர் ஒன்றிய அரசால் நியமிக்கப்படுபவர் என்பதால் ஒன்றிய அரசின் கட்சி ஆட்சியில் இல்லாத ஒரு மாநிலத்தில் அவரால், மாநில சட்டமன்ற முடிவுகளுக்கு ஒத்து போகாமல் இருக்க கூடும் என்ற அச்சத்தை அன்றைக்கு அவர் வெளிப்படுத்துகிறார்.

எனவே, சட்டமுன்வடிவுகளை திருப்பி அனுப்பும் அதிகாரத்தை இரு அவைகள் உள்ள மாநிலங்களுக்கு மட்டுமே பொருந்தும் வகையில் அமைக்க வேண்டும் என்று தன் கருத்தினை அன்றைக்கு பதிவு செய்கிறார். அதற்கு பதிலளித்த அரசியலமைப்பு வரைவுக் குழு உறுப்பினர் டி.டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள், பேராசிரியர் சக்ஸேனா அவர்களின் அச்சம் அவசியமற்றது என்றும், ஆளுநர் என்பவர் தன்னிச்சையாக செயல்பட வகை செய்யப்படவில்லை என்றும், அவர் எப்போதுமே அமைச்சரவையின் அறிவுரையின்படியே செயல்பட வேண்டியவர்தான் என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

எனவே, இரு அவைகள், அதாவது, முன்பு சட்டமன்ற மேலவை என்ற அமைப்பு இருந்தபோது, அதனடிப்படையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவினை, அதில் மாற்றுக் கருத்து சட்டமன்றத்திற்கு இருந்தால், ஆளுநருக்கு அந்தச் சட்டமுன்வடிவினை ஏற்பது அல்லது திரும்ப அனுப்புவது குறித்த அறிவுரையை அமைச்சரவை வழங்க வழி செய்யப்பட்டது. ஆளுநருக்கு இதில் தனிப்பட்ட எந்தவித முடிவெடுக்கும் அதிகாரமும் வழங்கப்படவில்லை என்பதை 1.8.1949 நாளிட்ட அரசியலமைப்புச் சட்ட விவாதங்கள் பக்கம் 61ல் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### தேசிய பெண்குழந்தை தினத்தில் மாநில விருதுக்கு

# தருமபுரி மாவட்டத்தில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

## மாவட்ட ஆட்சியர் தகவல்!

*தருமபுரி, நவ. 20-*

தேசிய பெண் குழந்தைகள் தினத்தில் மாநில விருது வழங்கிட தருமபுரி மாவட்டத்தில் பெண் குழந்தைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும், பாடுபட்டு வீரதீர செயல் புரிந்து வரும் 13 வயதிற்கு மேல் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளைசிறப்பிக்கும் முகமாக அதற்கான மாநில அரசு விருது ஒன்றை அறிவித்து அரசாணை பிறப்பித்து கடந்த 2017 -ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இதன்படி வருடந்தோறும் மேற்குறிப்பிட்டவாறு சேவை புரிந்து வரும் சிறந்த குழந்தை ஒருவருக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் (ஜனவரி 24) பாராட்டு பத்திரமும், ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலையும் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது. அதே போன்று, வருகிற 24 ஜனவரி 2024 -ல் தேசிய பெண் குழந்தை தினத்தில் மாநில விருது வழங்கிட 13 வயதிற்கு மேற்பட்ட 18 வயதிற்குட்பட்ட (31 டிசம்பர் 2023 ன் படி ) மேற்குறிப்பிட்டவாறு தகுதியான பெண் குழந்தைகளிடமிருந்து விண்ணப்பங்கள் 28.11.2023 வரை வரவேற்கப்படுகின்றன.

விருதிற்கான விண்ணப்பங்கள் மாவட்ட முதன்மைகல்வி அலுவலர்/ மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்/ மாவட்ட கல்வி அலுவலர்/ மாவட்ட திட்ட அலுவலர் /காவல்துறை/ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் வாயிலாக உரிய முன்மொழிவுகளுடன் மாவட்ட சமூக நல அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பங்கள் கூர்ந்தாய்வு செய்து, மாவட்ட ஆட்சியர் பரிந்துரையுடன் சமூக நல ஆணையரகத்திற்கு பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்படும். மாவட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மாநில அளவில் தேர்வுக் குழு மூலம் பரிசீலனை செய்யப்பட்டு, அனைத்து தகுதிகள் பெற்ற ஒரு பெண் குழந்தை தேர்வு செய்யப்பட்டு 24.01.2024 அன்று மாநில விருது வழங்கப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கி.சாந்தி தெரிவித்துள்ளார்.

# டெல்லியில் இன்று முதல் பள்ளிகள் திறப்பு!

*புதுடெல்லி, நவ. 20-*

டெல்லியில் காற்றின் தரம் மிகவும் மோசமாக உள்ளது. குறிப்பாக தீபாவளி மற்றும் அதற்கு முந்தைய நாட்களில் டெல்லியில் காற்று மாசுபாடு மிகவும் அதிக அளவில் இருந்தது.

காற்று மாசு மிகவும் அதிகரித்ததை தொடர்ந்து டெல்லியில் கடந்த 9ந்தேதி முதல் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

இந்த நிலையில் டெல்லியில் தற்போது காற்று மாசு குறைந்துள்ளது. கடந்த 17 ந்தேதி காற்று மாசு 405 ஆக இருந்தது. அது நேற்று 319 ஆக குறைந்துள்ளது. இதையடுத்து டெல்லியில் இன்று (20ந்தேதி) முதல் பள்ளிகள் திறக்கப்படுகின்றன. இன்று முதல் அனைத்து பள்ளிகளும் திறக்கப்படும் என்று டெல்லி மாநில அரசு தெரிவித்து உள்ளது.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப்போட்டி களில் 76 கல்லூரி மாணவர்களும் 240 பள்ளி மாணவ மாணவிகளும்கலந்துகொண்டு தங்களின்திறமைகளைவெளிப்படுத்தினர். தேர்வுசெய்யப்பட்டமாணவமாணவிகளுக்கு காஞ்சிபுரம்தெற்குமாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ, மொத்தம் 1,14,000 ரூபாய் பரிசுத்தொகையும் மற்றும் சான்றிதழ், நினைவுப்பரிசு ஆகியவற்றையும் வழங்கி வெற்றிபெற்ற மாணவர்களை வாழ்த்திப் பேசினார். உடன் க.செல்வம் எம்.பி., ச.இனியரசு, கோகுலகண்ணன், ஏ.சிற்றரசு, பொன்.சிவக்குமார், வாலாஜாபாத் ஏ.வி.சுரேஷ்குமார், மாவட்டகுழு உறுப்பினர் ராஜாராமகிருஷ்ணா, ரவிக்குமார், தனசேகரன், முத்து ஒன்றிய நிர்வாகிகள் வரதராஜ், நாகப்பன், வேதாசலம், மு.கண்ணன், குப்பன், அய்யப்பன், மதுரை, பொன்.சக்கரபாணி, பா.லோகநாதன், லோகநாதன், சீமான், மாரிமுத்து, புருசோத்தமன், சத்தியசீலன், ராஜா, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மு.குணசேகரன், இராம்பிரசாத், சுரேஷ்குமார், சரளா தனசேகரன், எஸ். தமிழ்செல்வன், சு.சரண்ராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.



தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழக முதல்வர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி கழக சட்டத்துறை சார்பில் மூன்றாண்டுகளுக்குட்பட்ட வழக்கறிஞர்களுக்கான 5வது மண்டல பேச்சுப்போட்டியை இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு எழும்பூர் ரமடா ஹோட்டலில் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ வெற்றிப் பெற்ற வழக்கறிஞர்களுக்கு பதக்கங்களை வழங்கினார். மேலும் இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், அருள்மொழி, இராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் பச்சையப்பன், சந்துரு, தலைமை கழக வழக்கறிஞர்கள் கே. ஜே. சரவணன், மறைமலை மற்றும் மாவட்ட வழக்கறி ஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிகொண்டான் மற்றும் நன்மாறன் ஆகியோர் கலந்துகொண்டனர். சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் துரைக்கண்ணன் நன்றியுரை ஆற்றினார். இதில் வெற்றிபெற்ற வழக்கறிஞர்களுக்கு பதக்கம், பரிசுத்தொகை, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



பெரம்பலூர் மாவட்டத்தில் 2024ம் ஆண்டிற்கான உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற மாவட்ட அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், சிறு, குறு தொழில் முனைவோர் மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களுடனான சிறப்பு நோக்குக் கூட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் ரூ.54.58 கோடி மதிப்பில் பல்வேறு தொழில்கள் தொடங்க உள்ள 11 நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு பறிமாற்றிக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் குன்னம்.சி.இராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் திருவெறும்பூர் வடக்கு தெற்கு ஒன்றியம் துவாக்குடி நகரம் மற்றும் கூத்தப்பார் பேரூர் கழகத்தை சேர்ந்த பாக முகவர்கள் மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் திருவெறும்பூர் தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் செங்குட்டுவன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.எஸ்.எம்.கருணாநிதி, கங்காதரன், நகரக் கழகச் செயலாளர் காயாம்பு, பேரூர் கழகச் செயலாளர் தங்கவேல், பாக முகவர்கள் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில்

# உத்திரமேரூரில் இளைஞர் எழுச்சி நாள் விழா பொதுக்கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை! கெ.ஞானசேகரன் வரவேற்பு!

காஞ்சிபுரம், நவ.20-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றிய பேரூர் தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு, மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (20.11.2023 - திங்கள்கிழமை) மாலை 5 மணிக்கு, கே.எம்.ஆர். பேருந்து நிலையம் அருகில் உத்திரமேரூரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

ஒன்றியக் கழகச் செயலாளர் கெ.ஞானசேகரன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல் முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இதில் மாலட்ட துணைச் செயலாளர் க.செல்வம் எம்.பி., இரா.நாகன், ஒன்றியச் செயலாளர் டி.குமார், பொ.சசிகுமார், ஹேமலதா ஞானசேகரன், வசந்திகுமார், மா.ஏழுமலை, பெ.மணி, இளமதி கோவிந்தராஜ், பத்மா பாபு, டாக்டர் வி.திவாகர், கோ.காளிதாஸ், ஏ.கே.ரமேஷ்பாபு, டி.கே.கோபாலகிருஷ்ணன், கே.தயாளன், தே.வீராசாமி, எம்.ஆர்.தாமஸ், ஏ.மூர்த்தி, ஆர்.மணி, இ.கண்ணாயிரம், லோ.பவ்யா, து.சுந்தர், மு.தாமோதரன், தா.சுப்பராயன், எஸ்.ருத்தரகோட்டி, சு.சுகுணா, சுந்தர்ராஜன், ஏ.எம்.கெங்கன், தே.பாபு, டி.எஸ்.குமாரதேவ், இரா.கார்த்திகேயன், க.மாய கிருஷ்ணன், து.ரமேஷ், ஏ.வீரமணி, ஆ.ஜெயகாந்தா, ப.மகேந்திரன், க.அப்துல் அக்கீம், வெ.கோவிந்த ராஜ், வெ.குணசேகரன், மா. கருணாநிதி, ஏ.செல்லமுத்து, வி.ராஜபாண்டி, ஆ.நீல கண்டன், இ.மனோகரன், ம.சத்தியா மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

வெ.கோவிந்தராஜ் நன்றி கூறுகிறார்.

### விவசாயிகள் பயன்பெறும் வகையில்

# தமிழ்நாட்டிலேயே பெரம்பலூர் மாவட்டத்தில்தான் அதிக விழுக்காடு பயிர்க்கடன்!

## கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெருமிதம்!

பெரம்பலூர் , நவ. 20 -

பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவுத் துறையின் சார்பில் கர்ணம் சுப்ரமணியம் சகுந்தலா திருமண மண்டபத்தில் நடைபெற்ற 70வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் 68 பயனாளிகளுக்கு ரூ.4.30 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு கடன் உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம் தலைமையில் வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்வில் அமைச்சர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து மக்களுக்கான பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அரசு நகர பேருந்துகளில் கட்டணம் இல்லாபயணதிட்டத்தினை அறிவித்து இதுவரை இத்திட்டத்தின் கீழ் 375 கோடி பயணங்கள் பெண்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு சராசரியாக 40 லட்சம் பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயணம் செய்து தங்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி வருகிறார்கள்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுப்படாத ஒப்பற்ற திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். கிராமப்புறங்களில் வசித்து வரும் விவசாய பெருமக்கள் காலையிலேயே வேலைக்கு சென்று விடுவதால் அவர்களது குழந்தைகள் காலை உணவை சரிவர சாப்பிட முடியவில்லை என்பதை அறிந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், காலை உணவு திட்டத்தினை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இந்த திட்டத்தின் மூலம் மாணவர்கள் சத்து மிக்க காலை உணவை சாப்பிட்டு கல்வியை பெறுகிறார்கள். இந்தத் திட்டத்திற்காக வழங்கப்படும் பொருட்கள் கூட்டுறவுத் துறை மூலம் விநியோகிக்கப்படுவதால் இத்திட்டம் கூட்டுறவுத் துறைக்கும் பயனுள்ளதாக இருக்கிறது.

தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி பெரம்பலூர் மாவட்டத்தில் வட்டியில்லாப் பயிர்க்கடன் நவம்பர் 15 ஆம் தேதி முடிய ரூ.245.08 கோடி 29,524 விவ சாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக நடப்பாண்டில் அக்டோபர் 2023 முடிய 41,405 விவசாயி களுக்கு ரூ.30.22 கோடி மதிப்புள்ள 12975.366 டன் உர விற்பனை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பயிர் கடன், டாம்கோ, டாப்செட்கோ கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்கள் வழங்கியதில் பெரம்பலூர் மாவட்டம் தமிழகத்திலேயே முதலிடத்தில் உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக சுய உதவிக்குழுக்களின் 25,971 உறுப்பினர்களின் ரூ.52.72 கோடி அளவிலான சுய உதவிக்குழுக்கடன் தள்ளுபடி செய்யப்பட உள்ளது.

விவசாயிகள் தாங்கள் பெற்ற கடன் மூலம் பொருளாதாரத்தில் வலுவடைந்து கடனைச் செலுத்த ஏதுவாக மத்திய காலக் கடன்கள் 552 நபர்களுக்கு ரூ.4.24 கோடி வழங்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் நகைக்கடன் நவம்பர் 15 ஆம் தேதி முடிய 18,884 நபர்களுக்கு ரூ.117.74 கோடி வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு நடப்பாண்டில் நவம்பர் 15 ஆம் தேதி முடிய 690 மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 8725 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.67.12 கோடி கடனாக வழங்கப்பட்டு, குழு உறுப்பினர்களுக்கு குடும்பங்கள் முன்னேற்றம் அடைந்து குடும்பப் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்று வருகின்றன.

பிற்படுத்தப்பட்டோரை மேம்படுத்தும் வண்ணம் டாப்செட்கோ திட்டத்தின் கீழ் 633 நபர்களுக்கு ரூ.369.50 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. சிறுபான்மையினரை மேம்படுத்தும் பொருட்டு டாம்கோ திட்டத்தின் கீழ் 47 நபர்களுக்கு ரூ.29.50 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இப்படி ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள்.

இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர் கூட்டுறவுத் துறையின் சார்பில் மகளிர் சுயஉதவிக்குழுக்கடன், கறவை மாடு கடன் என பல்வேறு திட்டங்களின் மூலம் 68 பயனாளிகளுக்கு ரூ.4.30 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு கடன் உதவிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட அளவில் சிறந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், அனைத்து வகை கடன்களையும் தவணை தவறாமல் 100% முழுமையாக வசூல் செய்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், அதிக அளவில் சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், அதிக அளவில் பயிர்கடன் வழங்கிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம், அதிக அளவில் கால்நடை பராமரிப்பு கடன் வழங்கிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் போன்ற சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு பள்ளி மாணவ,மாணவிகளுக்கிடையே நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கும் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நினைவுப் பரிசுகளை வழங்கி பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் நகர்மன்றத் தலைவர் திருமதி அம்பிகா இராஜேந்திரன், பெரம்பலூர் ஒன்றியக்குழு தலைவர் திருமதி மீனா அண்ணாதுரை, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைபதிவாளர் க.பாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் துணைத்தலைவர் ம.முத்தமிழ்ச்செல்வி மதியழகன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், டாக்டர் அ.கருணாநிதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் நடப்போம் நலம் பெறுவோம் நடை பயிற்சியை தேனி மாவட்ட ஆட்சியர், ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ஆகியோர் துவக்கி வைத்தனர். விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் சேது ராஜா, பேரூராட்சி மன்ற தலைவர் சந்திரகலா, பேரூர் செயலாளர் சரவணன், ஆண்டிபட்டி டி.எஸ்.பி.ராமலிங்கம் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு!

தென்காசி, நவ. 20-

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள ஐந்தருவி, பழைய குற்றாலம், மெயின் அருவி, சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையினால் சீரான தண்ணீர் விழுகிறது.

இந்நிலையில், சபரி மலைக்கு செல்லும் அய்யப்ப பக்தர்கள் குற்றாலத்திற்கு வந்து செல்கிறார்கள். இதனால் அனைத்து அருவிகளிலும் ஐயப்ப பக்தர்களின் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது.

அருவிகளில் ஐயப்ப பக்தர்கள் ஆனந்தமாக குளித்துவிட்டு குற்றால நாதர் கோவிலில் தரிசனம் செய்து வருகின்றனர்.

மேலும் (ஞாயிறு) விடுமுறை என்பதால் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதியது. அருவிகளில் ஆர்ப்பரித்து கொட்டும் தண்ணீரில் சுற்றுலா பயணிகள் ஆனந்தமாக குளித்து மகிழ்ந்து வருகின்றனர். வாகன நெருக்கடி மற்றும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு நலன் கருதி கூடுதல் போலீசார் அருவி பகுதிகளில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

### ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் 2வது அலகு திட்டத்தால்

# தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் பலனடையும்!

## டாக்டர் செந்தில் குமார் எம்.பி. அறிக்கை!



தருமபுரி, நவ.20-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொடர் முயற்சி காரணமாக ஒகேனக்கல் கூட்டு குடிநீர் 2வது அலகு திட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதனால் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் பலனடையும் என்று டாக்டர் செந்தில்குமார் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்தபோது ஒகேனக்கல் கூட்டு குடிநீர் முதலாம் கட்டம் தொடங்கப்பட்டது.

தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் மக்கள் தொகை மற்றும் தொழில் பெருக்கத்தின் காரணமாக தண்ணீர் பற்றாக்குறை நிலவி வருகிறது இதனை அடுத்து தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் டி.என்.வி.எஸ்.செந்தில்குமார் கடந்த 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை தொடங்க வேண்டுமென கோரிக்கை வைத்து அதன் தொடர் நடவடிக்கையாக ஒன்றிய அமைச்சரை சந்தித்து வலியுறுத்தி வந்தார்.

2021 ஆம் ஆண்டு தர்மபுரிக்கு வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் செந்தில்குமார் சந்தித்து ஒகேனக்கல் குடிநீர் திட்டத்தில் இரண்டாம் அலகு தொடங்க வேண்டும் என கடிதம் அளித்து கோரிக்கை வைத்தார். தொடர் நடவடிக்கையாக தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்காக 7145 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அறிவித்திருந்தார்.

இத்திட்டம் தொலைநோக்கு நடவடிக்கையாக 2054 ம் ஆண்டு இல் உள்ள மக்கள் தொகை பெருக்கத்தை மனதில் வைத்து கணக்கிடப்பட்டுள்ளது இதன் மூலம் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 44 லட்சம் பொதுமக்கள் பயனடைவார்கள். இத்திட்டத்திற்காக பென்னாகரம் பகுதியில் நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் முதன்மை சமநிலை நீர்த்தேக்க மையம் அமைப்பதற்காக குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல் கூட்டு குடிநீர் இரண்டாம் கட்ட திட்டத்திற்காக காவிரி ஆற்றில் இருந்து 304 எம் எல் டி தண்ணீரை பயன்படுத்திக் கொள்ள ஒருமனதாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போதைய திட்ட மதிப்பீடு 7386 கோடி ரூபாய் என்று என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் பொருளாதார உதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள நகராட்சி ஓசூர் மாநகராட்சி 16 பேரூராட்சிகள் மற்றும் 20 ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 6802 கிராமப்புற குடியிருப்புக்கள் பயன்பெறும் என தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாங்காடு அரசு மேல்நிலைப்பள்ளியில், நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.3.81 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள 18 வகுப்பறை கட்டடப் பணிக்கு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பள்ளி மாணவிகளுடன் இணைந்து அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, மாவட்ட கல்வி அலுவலர் (அறந்தாங்கி) திருமதி.ராஜேஸ்வரி, ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி.ஜானகி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெங்களூர் வி. சிவசங்கர்

### நவம்பர் 20 (2003)



கருநாடக மாநில பொறுப்புக்குழுச் செயலாளராக பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தவர்.

பெங்களூர் மாநகராட்சி அலசூர் வட்டத்தில் நான்கு முறை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். மாநகராட்சி சுகாதாரக்குழுவிற்கு தலைவராகவும் மற்ற காலங்களில் அனைத்து குழுக்களிலும் உறுப்பினராகவும் தேர்வு பெற்று பணியாற்றியவர்.

1997இல் கருநாடக மாநில அரசு, இவரது மாநகராட்சி மன்ற உறுப்பினர் பணியினை பாராட்டி “கெம்பே கவுடா” விருது வழங்கி பாராட்டியது.

மேலும் இவரது தொண்டினை போற்றும் வகையில் இவர் வசித்த அலசூர் பகுதியில் உள்ள முக்கிய சாலைக்கு “சிவசங்கர் சாலை” என பெயர் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

விலைவாசி உயர்வு, இந்தி எதிர்ப்பு ஆகிய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



திருப்பத்தூர் மாவட்டம், கூட்டுறவு துறை சார்பில் 70 ஆவது அனைத்து இந்திய கூட்டுறவு வார விழா–2023 திருப்பத்தூர் சி.கே.சி மஹாலில் மாவட்ட ஆட்சித் தலைவர் டி.பாஸ்கர் பாண்டியன் தலைமையில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயம் வழங்கியும் சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் சி.என். அண்ணாதுரை எம்.பி., அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர். சூரியகுமார், நகர மன்ற தலைவர் சங்கிதாவெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.11.2023) சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் மதி சந்தை விற்பனை இணைய தளத்தினை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா , ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் , ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் (பொ) / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்க அலுவலர் திருமதி. சித்ரா விஜயன், மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர் (பொ), இணை இயக்குநர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சட்ட மசோதாக்களுக்கு

# ஆளுநர் உடனே ஒப்புதல் அளிக்க வேண்டும்!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அறிக்கை!

சென்னை, நவ.20-

உச்சநீதிமன்றம் உத்தரவிடும்வரை காத்திருக்காமல் சட்ட மசோதாக்களுக்கு தமிழ்நாடு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் நிறுவனத் தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-



பல்கலைக்கழக வேந்தர்களாக முதலமைச்சரை நியமித்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 10 சட்ட மசோதாக்களைக் காரணம் ஏதும் குறிப்பிடாமல் ஆளுநர் திருப்பி அனுப்பியிருந்தார். அவற்றை மீண்டும் சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்காகத் தமிழ்நாடு அரசு அனுப்பியுள்ளது. அவற்றை, உச்சநீதிமன்றம் உத்தரவிடும்வரை மீண்டும் கிடப்பில் போட்டு வைக்காமல் தமிழ்நாடு ஆளுநர் உடனே ஒப்புதல் அளிக்க வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறோம்.

“இந்தியாவில் உயர்கல்வி பயிலும் மாணவர்களில் கிட்டத்தட்ட 85% பேருக்கு மாநில அரசுகள் உருவாக்கிய பல்கலைக்கழகங்கள் தாம் உயர்கல்வியை வழங்குகின்றன” என 2019-20 ஆம் ஆண்டுக்கான உயர்கல்வி குறித்த அனைத்திந்திய ஆய்வறிக்கை (AISHE) தெரிவிக்கிறது. உயர்கல்வியிலும், ஆராய்ச்சிக் கல்வியிலும் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கும் மாநில மாகத் தமிழ்நாடு திகழ்கி றது. அது மட்டுமின்றி இந்தியாவின் முதன்மையான 100 பல்கலைக்கழகங்களில் தமிழ்நாட்டிலுள்ள 9 மாநில அரசுப் பல்கலைக்கழகங்கள் இடம் பிடித்துள்ளன.

மாநில அரசுகள் தமது நிதியைக்கொண்டு உருவாக்கும் பல்கலைக்கழகங்களுக்கு வேந்தராக ஆளுநரை நியமிக்க வேண்டுமென எந்த சட்ட நிர்ப்பந்தமும் கிடையாது. அரசமைப்புச் சட்டம் வரையறுத்திருக்கும் ஆளுநரின் பணிகளில் பல்கலைக்கழக வேந்தராக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படவில்லை. தனியார் நடத்தும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் அவற்றின் உரிமையாளர்கள்தான் வேந்தர்களாக உள்ளார்கள். அவற்றில் ஆளுநருக்கு எந்த வேலையும் கிடையாது.

இந்தியா சுதந்திர மடைந்தபின் மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சியே ஆட்சி செய்ததால் ஆளுநர்களை வேந்தர்களாக நியமிக்கும் மரபு அறிமுகமானது. அதன் பிறகு ஆட்சிக்கு வந்த கட்சிகளும் அதே மரபைப் பின்பற்றி வந்தன. அதையே வாய்ப்பாக வைத்து ஆளுநர்களைப் பயன்படுத்தி பா.ஜ.க. அல்லாத மாநிலங்களில் உயர்கல்வியை சீரழிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

குஜராத் முதலமைச்சராக நரேந்திர மோடி இருந்த போது குஜராத்தில் இருக்கும் 14 மாநில அரசுப் பல்கலைக்கழகங்களில் அப்போது வேந்தராக இருந்த ஆளுநரை நீக்கி விட்டு முதலமைச்சரான தன்னை வேந்தராக நியமித்து சட்டம் இயற்றினார். அதற்கு காங்கிரஸால் நியமிக்க ப்பட்டிருந்த ஆளுநர் கமலா பெனிவால் ஒப்புதல் தரவில்லை. மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பா.ஜ.க.வைச் சேர்ந்த ஓ.பி.கோலி குஜராத்தின் ஆளுநர் ஆனதும் 2015 இல் அந்த சட்ட மசோதாவுக்கு ஒப்புதல் தந்தார். இப்போது முதலமைச்சர் தான் அங்கே வேந்தராக உள்ளார். தமிழ்நாடு சட்டப்பேரவையில் இன்று வெளிநடப்புச்செய்தபா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் குஜராத்தில் மோடி எடுத்த நடவடிக்கை தவறு என்கிறார்களா?

மத்திய மாநில உறவுகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட ஆணையங்கள் ஆளுநரை வேந்தராக நியமிக்க வேண்டாம் என்றுதான் பரிந்துரை செய்துள்ளன. “அரசியலமைப்புச் சட்டத்தால் முன்வைக்கப்படாத ‘பல்கலைக்கழக வேந்தர்’ முதலான அதிகாரங்களை ஆளுநருக்கு வழங்குவதை மாநில சட்டமன்றங்கள் தவிர்க்க வேண்டும்” என்று சர்க்காரியா கமிஷன் பரிந்துரைத்துள்ளது.

“ஆளுநரை வேந்தராக நியமிப்பதால் வீண் சர்ச்சைகளுக்கும், பொது மக்களின் விமர்சனங்களுக்கும் அவர் ஆளாக நேரிடும்” என பூஞ்சி கமிஷன் தெரிவித்துள்ளது.

எனவே, ஆளுநரை பல்கலைக்கழக வேந்தராக நியமிப்பதில்லை என்ற தமிழ்நாடு அரசின் முடிவு அரசியல் சட்டப்படி சரியானது; மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்கு உதவக்கூடியது. இதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வரவேற்று ஆதரிக்கிறோம்.

தமிழ்நாடு ஆளுநர் இப்போதாவது தனது அதிகாரம் என்னவென்பதைப் புரிந்துகொண்டு இந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் தரவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிறுவனர் - தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

# பேரவையில் நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களும் ஆளுநருக்கு அனுப்பிவைப்பு!

சென்னை,நவ.20-

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்கள் ஒப்புதலுக்காக நேற்று மாலையே ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 10 சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் நிறுத்திவைத்திருந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, இது தொடர்பாக உச்சநீதி மன்ற கருத்து வெளியானதும் உடனடியாக அரசுக்கு திருப்பி அனுப்பினார்.

திருப்பி அனுப்பப்பட்ட மசோதாக்கள் சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டால் வேறு வழியின்றி ஆளுநர் ஒப்புதல் தந்தாக வேண்டும். எனவே உடனடியாக தமிழ்நாடு சட்டப்பேரவையில் சிறப்புக்கூட்டம் நேற்று முன்தினம் கூட்டப்பட்டு ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட 10 மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டது. அதற்கான காரணங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேரவையில்விளக்கிப் பேசினார். நேற்று முன்தினம் மாலை அந்த 10 மசோதாக்களும் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### சிவகங்கையில்

# ரூ.77 கோடியில் புறவழிச் சாலை அமைக்கும் பணி!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை. நவ.20-

சிவகங்கையில் ரூபாய் 77 கோடியில் புறவழிச் சாலை அமைக்கும் பணி. அமைச்சர் பெரிய கருப்பன் தொடங்கி வைத்தார். சிவகங்கைநகர் காஞ்சிரங்காலிலிருந்து வஸ்தாபட்டி, சூரக்குளம்,பனங்காடி வந்தவாசி, புதுப்பட்டி வழியாக இளையான்குடி தொண்டி சாலையை இணைக்கும் வகையில்10.8 கீ.மீ. தூரம் புறவழிச்சாலை அமைக்கப்பட உள்ளது. ரூபாய் 77 கோடியில் இந்த புறவழிச் சாலை நெடுஞ்சாலை துறையின் மூலம் அமைக்கப்பட உள்ளது . இதற்கான திட்டப்பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்பு பொறியாளர் ஜவகர் முத்துராஜ் வரவேற்றுப் பேசினார்.

ரூபாய் 77 கோடியில் அமைய உள்ள புறவழிச் சாலை திட்டப்பணிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற குழு தலைவர் கே. எஸ். எம் மணி முத்து, சிவகங்கை ஒன்றியகுழுதலைவர் மஞ்சுளா பாலச்சந்தர், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி . எ ம் . து ரை ஆ ன ந் த் வாழ்த்துரை வழங்கினார்.

கோட்ட பொறியாளர் பிரசன்ன வெங்கடேசன் நன்றிகூறினார்.

இந்த புறவழிச்சாலை 20 மாதங்கள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மோகனச் சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்து ராமலிங்கம், எம்.ஜெயராமன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி, மதிவாணன், சிவகங்கை நகர்மன்ற துணைத் தலைவர் எம். கார். கண்ணன், ஒன்றிய இளைஞரணி அணிப்பாளர் செல்வம், மகளிரணி நிர்வாகிகள் மார்கரெட் கமலா, திலகவதி கண்ணன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, பொதுக்குழு உறுப்பினர் சுரேஸ்குமார், ஒன்றியத் துணை செயலாளர் முத்துகுமார், வட்டாட்சியர் ஸ்ரீதர் உட்பட நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

# சட்டப்பேரவையில் குறள்!



சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், நேற்று முன்தினம் (நவ.18) படித்த குறளும், அதற்கான கலைஞர் உரையும் வருமாறு:-

**குறள்: “மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற**
**இடுக்கண் இடர்ப்பா டுடைத்து.”**

**கலைஞர் உரை:** தடங்கல் நிறைந்த கரடுமுரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துக்கொண்டு போவது போல, விடா முயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு வெற்றி கிட்டும்.

### பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

# கிருஷ்ணகிரியில் முன்னாள் எம்.எல்.ஏ., பி.முருகன் இல்ல மணவிழா!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்

கிருஷ்ணகிரி, நவ.20-

கிருஷ்ணகிரியில் கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி முருகன் மகள் திருமண விழா நடைபெறுகிறது.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை செயலாளரும், வேப்பனபள்ளி தொகுதி முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான பி.முருகன் அவர்களது மகள் மருத்துவர் கனிமொழி என்கிற ஜெய்ஸ்ரீ மணமகன் மருத்துவர் நவீன் குமார் ஆகியோரது திருமண விழா வருகிற



23.11.2023 வியாழக்கிழமை காலை 11 மணி அளவில் கிருஷ்ணகிரி அருகே உள்ள குந்தாரப்பள்ளி குமரன் மஹாலில் கழக தலைவவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த திருமண நிகழ்ச்சிக்கு

கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன்,

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்ட மன்ற உறுப்பினர் ஒய் பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்ற உள்ளார்கள்.

தமிழக அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள்

கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர்கள், தலைமை கழக செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள்

கிருஷ்ணகிரி மேற்கு, கிழக்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,

கழக நிர்வாகிகள், ஏராள மானோர் கலந்து கொள்கின்றனர்.

### கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி.

# நீலகிரி மாவட்டத்தில் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு

உதகை, நவ.20-

நீலகிரி மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இன்று 20.11.2023 - திங்கட்கிழமை அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.

21.11.2023 இன்று- செவ்வாய்கிழமை காலை 10.30 மணி: மாவட்ட கழக கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுதல்.

மாலை 4 மணி: உதகை நகர தி.மு.க. சார்பில முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பிங்கர்போஸ்ட் திரேசாஸ் பள்ளியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுதல்.

22.11.2023 - புதன்கிழமை அன்று



மதியம் 2 மணி: டான்டீ தோட்ட தொழிலாளர்களுக்கு 20 சதவீத போனஸ் மற்றும் தினச்சம்பளம் ரூ.438 வழங்கி உதவிய தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும்,

இதற்கு உகந்த உதவிகளை செய்த நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அவர்களுக்கு தோழமை தொழிற்சங்கங்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வரவேற்பு மற்றும் நன்றி தெரிவிக்கும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுதல்.

23.11.2023 - வியாழக்கிழமை காலை 11 மணி: குன்னூர் விவேக் டூரிஸ்ட் ஹோம் கூட்ட அரங்கில் குன்னூர் மற்றும் கோத்தகிரி பகுதி டான்டீ தோட்ட தொழிலாளர்கள் மற்றும் டான்டீ பணியாளர்களுடன் கலந்துரையாடல்.

மேற்கண்ட கழக நிகழ்ச்சிகளில் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள 41 தொழிலாளர்கள்!

## கவலையுடன் காத்திருக்கும் உறவினர்கள்

உத்தரகாண்ட், நவ.20-

உத்தரகாண்ட் மாநிலம் உத்தரகாசி மாவட்டத்தில் சில்க்யாரா தண்டல்கான் இடையே சுமார் 4.5 கி.மீ. தூரத்துக்கு அமைக்கப்பட்டு வரும் சுரங்கப்பாதையின் ஒரு பகுதி கடந்த 12 ந்தேதி இடிந்து விழுந்தது. இதில் 41 தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர். அவர்கள் ஆக்சிஜன் குறைந்த சூழ்நிலையில் அதற்குள் தவித்து வருகிறார்கள்.

சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணி தொடர்ந்து ஒரு வாரமாக நடைபெற்று வருகிறது. தொழிலாளர்கள் வெளியே வருவதற்காக இடிந்து விழுந்த பகுதிக்குள் துளையிட்டு குழாய்களை செலுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக அமெரிக் காவில் தயாரிக்கப்பட்ட எந்திரம் தற்போது, பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

### நாளை நடைபெறுகிறது!

# சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!



## அமைச்சர் - மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை (21.11.2023-செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணி அளவில் காரைக்குடியில் உள்ள மாவட்டதி.மு.க. அலுவலகமான-தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகையில், பசும்பொன் தா. கிருட்டிணன் அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்புஅணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

வாக்காளர் சேர்க்கை முகாம்.

சிவகங்கை மாவட்டத்திற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர்-இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வருகை,

இளைஞர் அணிச் செயலாளர் பிறந்தநாள் விழா.

திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் பயன்பெறும் படிவத்தைப் பூர்த்தி செய்தல்.

கழக வளர்ச்சிப் பணிகள்.

**அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்**
செயலாளர்
சிவகங்கை மாவட்ட தி.மு.க.




கழக இளைஞர் அணி 2ஆவது மாநில மாநாடு சேலத்தில் வரும் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், மாநாட்டுக்குழுவின் செயலாளர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநாட்டின் வரவேற்புக்குழு, மேடை நிர்வாகக்குழு, பேச்சாளர் குழு உட்பட அனைத்துக் குழுக்களின் செயலாளர்கள், மாநாட்டின் பணிகள் முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

### அம்மையார் ஜெயலலிதா பெயரைச் சூட்ட வகை செய்யும் சட்ட மசோதாவிற்கு அ.தி.மு.க. எதிர்ப்பு - விந்தையாக உள்ளது!

# உண்மைக்கு மாறான குற்றச்சாட்டு கூறி அ.தி.மு.க. வெளிநடப்பு!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் அனிதா ராதா கிருஷ்ணன் விளக்கம்!



சென்னை, நவ. 20- சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் அ.தி.மு.க. வெளிநடப்புச் செய்ததை அடுத்து, அவ்வி வாதத்தில் பேசிய மீன்வளம் மற்றும கால்நடைத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், “அ.தி.மு.க. வினர் வெளிநடப்புக்குக் கூறிடும் காரணம் உண்மைக்குப் புறம்பானது” என்று ஆதா ரங்களுடன் எடுத்துக் கூறி தோலுரித்தார்.

இது தொடர்பாக, சட்டப்பேரவையில் அமைச்சர் அனிதா ராதா கிருஷ்ணன் குறிப்பிட்டதாவது:

எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது மாதிரி, மீன்வள பல்கலைக் கழகத்தில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை. எந்தப் பெயரில் இருந்ததோ, அந்தப் பெயரில்தான் தொடர்ந்து இருக்கின்றதே தவிர, தவறான ஒரு கருத்தைச் சொல்லி இன்று வெளிநடப்பு செய்திருக்கின்றார்கள்.

2012 ஆம் ஆண்டு மீன்வளப் பல்கலைக்கழகத்தை அ.தி.மு.க. ஆட்சியில் அமைப்பதற்காக சட்டம் கொண்டுவரப் பட்டது. இதனை அடுத்து, இந்தப் பல்கலைக்கழகத்தை முன்னாள் முதலமைச்சர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயரில், பெயர் மாற்றம் செய்வதற்கான சட்டத் திருத்த முன்வடிவு 2020 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள், 9 ஆம் நாள், அ.இ.அ.தி.மு.க. அரசால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதுமட்டுமின்றி, இந்தப் பல்கலைக்கழகம் குறித்த வேறு சில திருத்தங்களும், இந்தச் சட்ட முன்வடிவில் இருந்தன.

ஆனால், அன்றைய ஆளுநர் அவர்களும், இன்றைய ஆளுநர் அவர்களும் இந்தச் சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளிக்காமல், தற்போது திருப்பி அனுப்பியுள்ளார்கள்.

இந்தச் சட்டமுன்வடிவிற்கு ஆளுநர் அவர்களின் ஒப்புதல் கிடைத்தால் மட்டுமே, முன்னாள் முதலமைச்சர் அவர்களின் பெயரில் இந்த மீன்வளப் பல்கலைக்கழகம் சட்டப்பூர்வமாக இயங்கிட இயலும். இதன்பிறகே இந்தப் பல்கலைக்கழகம் குறித்து மற்ற சட்டமுன்வடிவிலும் பெயர் மாற்றம் செயல்பாட்டிற்கு வரும்.

இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ளாமல், அம்மையார் அவர்களின் பெயரில் இருந்த இந்தப் பல்கலைக் கழகத்திற்குப் பெயர் சூட்டுவதற்கான இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவினை எதிர்த்து, அவர்களது கட்சியினரே வெளிநடப்புச் செய்திருப்பது விந்தையாக உள்ளது.

முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், இவ்வாறு மறைந்த தலைவர்கள் பெயரில் செயல்பட்டு வரும் நிறுவனங்களையோ, திட்டங்களையோ மாற்றக்கூடாது என்பதில் எப்போதுமே உறுதியாக இருந்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன் தொடர்ச்சியாகவே, அவரது பெயரை மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு சூட்டுவதற்கான சட்டமுன்வடிவினை மீண்டும் இந்த அவையில் நாங்கள் கொண்டு வந்துள்ளோம்.

அரசு கொண்டு வந்த சட்ட முன்வடிவினை படிக்காமல், கொஞ்சம் கூட புரிந்து கொள்ளாமல், மறைந்த முதல்வரின் ... என்ற உண்மைக்கு மாறான ஒரு குற்றச் சாட்டை இந்த அவையில் பதிவு செய்துள்ளார்கள். இதை அவைக்குறிப்பில் இருந்து நீக்குமாறு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர்: மீன்வளம் மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கோரிக்கையை ஏற்று அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### மீண்டும் நிறைவேற்றப்பட்ட பத்து சட்ட முன்வடிவுகளுக்கு

# ஆளுநர் உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை!



சென்னை, நவ. 20 - தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் மீண்டும் நிறைவேற்றப் பட்ட 10 மசோதாக்களுக்கு இனியும் கால தாமதம்செய்யாமல் ஆளுநர் உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர்வைகோ வலியுறுத்தியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் “மாநில அரசால் அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கால தாமதப்படுத்தும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகளைச் சட்ட விரோதம் என அறிவிக்க உத்தரவிட வேண்டும்” என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

நவம்பர், 10 ஆம் தேதி, இந்த வழக்கு விசாரணையின் போது தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அவர்கள், “ஆளுநர் ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கலாம். ஒருவேளை அது நிதி மசோதாவாக இல்லாமல் இருந்தால் முடிவை நிறுத்தி வைக்கலாம் அல்லது அதில் திருத்தம் மேற்கொள்ள பரிந்துரைத்து அரசுக்கு திருப்பி அனுப்பலாம் அல்லது சட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கலாம். ஆனால், எதுவுமே செய்யாமல் காலவரையின்றி மசோதாக்களை கிடப்பில் போட முடியாது” என்றார்.

இதனையடுத்து, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, ஒன்றிய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது. அந்த நோட்டீஸில், “மக்களின் உரிமைகளைச் சிதைக்கும் வகையில் ஆளுநர் செயல்படுகிறார்” என்ற தமிழக அரசின் மனுவுக்கு பதிலளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நவம்பர் 20 ஆம் தேதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும்போது. “மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல் அல்லது அவருக்குப் பதிலாக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும்” என்றுஉச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

அரசியலமைப்பு சட்டப் பிரிவு 200 இன் படி, மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதல் கோரி அனுப்பப்படும் கோப்புகள் மீது அவர் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் முடிவு எடுக்க வேண்டும்

ஆனால் தமிழ்நாடு சட்டமன்றத்தில் 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகளைக் கூட பரிசீலிக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி கிடப்பில் போட்டிருந்தார்.

அதுமட்டுமின்றி, கடந்த ஏப்ரல் மாதம் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள், “தமிழ்நாடு அரசு அனுப்பிய சட்ட முன் வடிவுகளை நிறுத்தி வைத்தாலே நிராகரிப்பதாக பொருள்” என்று அகந்தையோடு தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட 12 சட்ட முன் வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வைத்த ஆளுநர் ஆர்.என். ரவி, உச்சநீதிமன்றம் கடுமையான கருத்தை தெரிவித்த உடன் அவசர அவசரமாக 10 சட்ட முன் வடிவுகளையும் தமிழ்நாடு அரசுக்கு திருப்பி அனுப்பி இருக்கிறார்.

உடனடியாக தமிழ்நாடு அரசு இன்று நவம்பர் 18 ஆம் தேதி சட்டமன்றத்தின் சிறப்பு கூட்டத்தைக் கூட்டி, சட்டப்பேரவை விதி 143 ன் படி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனி தீர்மானம் கொண்டு வந்து 10 சட்ட முன் வடிவுகளையும் மீண்டும் நிறைவேற்றி இருப்பது வரவேற்கத்தக்கது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ள சட்ட முன்வடிவு களுக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 200 வது பிரிவின் படி, ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.






தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு
வழங்கப்பட்டு வந்த ஒருநாள் ஊதியம்
ரூ.375/-லிருந்து ரூ.438/- ஆக உயர்த்தி
ஊழியர்களுக்கு பண்டிகை காலத்தில்
20% BONUS வழங்கிட உத்தரவிட்ட
தொழிலாளர்களின் ஒப்பற்ற பாதுகாவலர்
இந்தியாவின் இரும்புத் தலைவர்
மக்கள் போற்றும் மாண்புமிகு
முதலமைச்சர்
அவர்களுக்கு மாவட்ட
மக்களின் சார்பில்
நன்றி! நன்றி!
கலைஞர் 100
1924 - 2023
நன்றி
ஆ.இராசா B.Sc., M.L. M.P
கழக துணைப் பொதுச்செயலாளர்
நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி
பா.மு.முபாரக் நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர்
அன்புடன் க.ராமச்சந்திரன் சுற்றுலாத்துறை அமைச்சர்



இராணிப்பேட்டை மாவட்டம் மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.ஆர்.ரவிச்சந்திரன்சுமதி ஆகியோரின் மகன் திருமண நிகழ்ச்சியில் கைத்தறி(ம) துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி,முன்னாள் மத்திய இணை அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். நிகழ்ச்சியில் அரக்கோணம் நகர செயலாளர் வி.எல்.ஜோதி,ஏ.கே.சுந்தரமூர்த்தி, மு.கண்ணையன்,ஆர்.தமிழ்ச்செல்வன், அ.அசோகன்,எ.அன்புலாரன்ஸ்,பூக்கடை என்.அரிகிருஷ்ணன்,எம்.சிவனாந்தம், துரைமஸ்தான்,கே.பசுபதி,அரிதாஸ்,நகர மன்ற துணை தலைவர் எ.கலாவதி அன்புலாரன்ஸ்,கோ.வ.தமிழ்வாணன்,விமல், வி.மோகன்,எஸ்.எழிலரசு, எஸ்.தேவராஜ்,தே.தினேஷ்,பி.பாலாஜி,ஆர்.மணிகண்டன்,ஜென்ரல் ஆர்.மாது, வழக்கறிஞர்கள் வீரராகவன்,ஆர். லோகாபிராமன்,எ.பிலால்,ஆர்.வினோத், அ.அருண்லாரன்ஸ்,சைதை மோகன்,தமிழரசு மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# ஆழித்தேரோடிய திருவாரூரில் “முத்தமிழ்த்தேர்” பவனி!

## பூண்டி கே.கலைவாணன் முன்னிலையில் பொதுமக்கள் வரவேற்றனர்!

திருவாரூர், நவ. 20 -

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் பேருந்து நிலையம், காட்டூர் கலைஞர் கோட்டம், திருவாரூர் பழைய பேருந்துநிலையம் மற்றும் நீடாமங்கலம் ஆகிய பகுதிகளில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, “முத்தமிழ்த் தேர்” என்ற அலங்கார ஊர்தி திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை தந்ததையொட்டி, மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., முன்னிலையில் வரவேற்று, முத்தமிழ்த்தேரின் உள்ளே அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு கழக நிர்வாகிகளும் பொது மக்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ ,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். ஜெயகுமார், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் உடனிருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அனைத்து தரப்பு மக்களுக்கும் ஒரு நிலையான பங்களிப்பைத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு நடத்தப்பட வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 12நூற்றாண்டு விழா குழுக்கள் அமைக்கப்பட்டன. அதில், “எழுத்தாளர்கலைஞர்” குழு, படைப்புலகின் முடிசூடாமன்னராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் இன்றைய இளம் தலைமுறையினருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத் தன்மையினை எடுத்து செல்லும் வகையில், எழுத்தாளர் கலைஞர் குழுவின் மூலம் அவரது புகழ்பாடும் “முத்தமிழ்த்தேர்” அலங்கார ஊர்தி 04.11.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கி அனைத்து மாவட்டத்திற்கு சென்று கடைசியாக 04.12.2023 அன்று சென்னையில் முடிவடையும். இவ்வாகனம் திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளது. இந்த வாகனம் “எழுத்தே எனது மூச்சு, எழுதுவதே எனது தினப்பழக்கம்” என்று முழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயன்படுத்திய பேனா வடிவில் அமைக்கப் பட்டுள்ளது.

இவ்வாகனத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் தமிழ் சமூகத்திற்கு படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்லும் வகையில் “முத்தமிழ்த் தேர்” அலங்கார ஊர்தி அனைத்து மாவட்டங்களிலும் காட்சிப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

கலைஞர் அவர்களின் அவர்களின் சிறப்புகளை விளக்கும் குறும்படமும் தொடர்ந்து திரையிடும் வகையில் ஒளித்திரையும் அமைக்கப்பட்டுள்ளது. பேனா வடிவிலான இந்த வானகத்தின் பின்புறம் இயந்திரத்தினால் திறந்து மூடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலங்கார ஊர்தியினை பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் அனைவரும் சென்று பார்வையிடும் வகையில் வாகனத்தின் உள்ளே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுர இல்ல உள்அமைப்பு தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் உள்ளே அஞ்சுகம் அம்மாள் அவர்களின் உருவச்சிலையும் அதன் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கையில் அமர்ந்திருப்பது போன்ற உருவச்சிலையும், அவர் பயன்படுத்திய நூலகத்தின் மாதிரி வடிவமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்துக்களுக்கு வடிவம் கொடுக்கும் அவரது படைப்புகளும், அவரது பன்முகத் தோற்றத்தினை விளக்கும் ஒலி, ஒளி அமைப்பும் உருவாக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

கலைஞர் அவர்களின் எழுத்துகளால் உயிர்ப் பெற்ற கவிதை, கட்டுரை, புதினங்கள், காப்பியங்கள் போன்றவற்றை கைப்பேசி வாயிலாக இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்திற்கு வருகைப்புரிந்த முத்தமிழ் தேரினை பள்ளி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் மலர்தூவி வரவேற்றனர்.

பள்ளி மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைப்பெற்றது. முத்தமிழ் தேரினை 5000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வுகளில் நகர செயலாளர் வாரை.எஸ். பிரகாஷ், நகர்மன்ற தலைவர் புவனப்பரியா செந்தில், துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள்,

ஒன்றியக்குழு தலைவர் புலிவலம் ஏ.தேவா, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும்

# டீசல்அளவு 19,000 லிட்டராக உயர்வு!

## தமிழக அரசு அறிவிப்பு!

சென்னை, நவ. 20-

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு பால்வளம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கை: மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும் வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து உயர்ந்து வரும் டீசல் எரியெண்ணெய் விலையினால் மீன்பிடி தொழில் லாபகரமானதாக இல்லை என்பதால், மீனவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடி தொழிலை தொடர்ந்திடும் வகையில், தற்போது வழங்கப்பட்டு வரும் மானிய டீசல் எரியெண்ணெய் அளவினை உயர்த்தி வழங்க அரசுக்கு பல்வேறு மீனவ சங்கங்கள் கோரிக்கைகள் அளித்துள்ளன.

அவர்களின் கோரிக்கையினை ஏற்று, 18.8.2023 அன்று ராமநாதபுரத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும், விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் அளவினை, படகு ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு 18,000 லிட்டரில் இருந்து 19,000 லிட்டர் வீதமும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு படகு ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 4,000 லிட்டரில் இருந்து 4,400 லிட்டர் வீதமும் உயர்த்த வழங்க அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அந்த அறிவிப்பினை 2024-2025ம் ஆண்டு முதல் செயல்படுத்தும் விதமாக நேற்று முன்தினம் அரசாணை வெளியிட்டுள்ளது. இதன்மூலம் 4,500 விசைப்படகு மீனவர்களும் 13,200 நாட்டுப் படகு மீனவர்களும் பயன் பெறுவார்கள்.

# தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, நவ.20-

தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் இலங்கை பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது. இன்று கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழக மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ராமநாதபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பாக ‘நீட்’ தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து கையெழுத்து இயக்கம் சிவகாசி பெரிய பள்ளிவாசல் முன்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாநகரச் செயலாளர் முதல் கையெழுத்திட்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். மாவட்ட அமைப்பாளர் செல்லத்துரை தலைமையிலும் மாவட்ட தலைவர் முகமது மதார் மரைக்காயர் முன்னிலையிலும் துணைத் தலைவர் சாதிக் அலி மற்றும் துணை அமைப்பாளர்கள் சிக்கந்தர் சேட், முகமது முஸ்தபா, நாகூர் கனி, பகுதி கழகச் செயலாளர் காளிராஜன், முத்தலிப், பொதுக்குழு உறுப்பினர் பால்ராஜ் மாநகராட்சி உறுப்பினர் ஜெயினுலாபுதீன் வட்டச் செயலாளர் ஜக்கரியா உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின் பேரில் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பாக கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரை போட்டிகளை மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., துவக்கி வைத்து பேசினார். உடன் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மாணவரணி அமைப்பாளர் ஆதிசங்கர், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கலாநிதி, பகுதி செயலாளர்கள் மருது பாண்டியன், சசிக்குமார், கவுரிசங்கர், மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கேசவன், கதிரவன், சரவணன், அபிதா, முரளி மற்றும் கழகத்தினர் மாணவ மாணவியர்கள் பங்கேற்றனர்

## மயிலாடுதுறை மாவட்ட 70வது வார விழாவில் 6,850 பேருக்கு ரூ. 51.31 கோடியில்

# நலத்திட்ட உதவிகள்: அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - செ.இராமலிங்கம் எம்.பி. பங்கேற்பு!

நாகை. நவ.20-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை ஏ.வி.சி.திருமண மண்டபத்தில் மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவுத்துறை சார்பில் 70 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெற்றது.

விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தார். விழாவில் 6,850 உறுபினர்களுக்கு ரு. 51 கோடியே 31 லட்சம் மதிப்பிலான நலதிட்ட உதவிகளை சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கி பேசுகையில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் இருந்தாலும் தமிழ்நாட்டில் கூட்டுறவு துறை விவசாயிகளுக்காகவும், ஏழை, எளியவர்களுக்காவும், மிக சிறப்பாக செயல்படுகின்ற மாநிலமாக தமிழ்நாடு. 70 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களானது தமிழ்நாட்டில் 2004-2025 ஆண்டுகளில் அப்போது இருந்த ஆடசியாளர்கள் செய்த குளறுபடிகளால் தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மை திவாலாகி மூடப்பட்டது.

2005 கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கவில்லை. அப்போது கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றியவர்களுக்கு சம்பளமே எடுக்க முடியாமல் வேலை விட்டு நின்று விட்டார்கள்.

அதன் பின் 2006 ம் ஆண்டு முத்தமிழ் கலைஞர் ஆட்சி வருகிறது. அப்போது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற உடன் யாரும் செய்யாத மகத்தான சாதனையாக தமிழ்நாட்டில் இருக்கின்ற22 லட்சத்து 40 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாய கடனை தள்ளுபடி செய்த தலைவர் முத்தமிழ் கலைஞர் அவர்கள் மட்டுமே. கடன் தள்ளுபடி செய்யப்பட்டதால் கூட்டுறவு வங்கிகளில் இருந்து விலை விட்டு சென்றவர்கள் மீண்டும் வேலையில் சேர்ந்தார்கள். மீண்டும் வங்கிகள் செயல்பட தொடங்கியது. ரூ. 7 ஆயிரம் கோடி என்பது தள்ளுபடி என்று அறிவித்ததோடு இல்லாமல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆண்டுக்கு ரூ.1,500 கோடி என்று 5 ஆண்டுகாலம் கூட்டுறவு சங்களுக்கு வழங்கி, யார் எல்லாம் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றவர்களுக்கு வங்கியில் கடன் நிலுவை எல்லை என்ற சான்றிதழும் வாங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். கடந்த ஆண்டு 2022-2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாய கடனாக ரூ. 10 ஆயிரம் கோடிக்கும் மேலாக வழங்கி உள்ளார்கள்.

அப்போது ஒன்றியத்தில் ஆட்சியில் இருந்து காங்கிரஸ் கட்சியின் பிரதமராக இருந்து மன்மோகன்சிங் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் தள்ளுபடி செய்ததை முன்உதாரனமாக வைத்து அதன் அடிப்படையில் இந்தியாவில் உள்ள விவசாயிகள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற கடன்களை 72 ஆயிரம் கோடி கடனை தள்ளுபடி செய்து விவசாயிகளை காப்பாற்றினார்கள். மக்களுக்கான வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்ற கூடிய அரசாக இன்றைய அரசு உள்ளது. குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சராக தளபதி அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் 5 பவுனுக்கு குறைவாக நகைக் கடன் பெற்றுள்ளவர்களின் நகைக்கடன் தள்ளுபடி செய்யப்படும் என் அறிவித்தார்கள்.

அதன் படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 ஆயிரத்து 13 கோடி மதிப்பிலான நகைக் கடன் தள்ளுபடி செய்து அதன் மூலம் தமிழ்நாட்டில் இருக்கின்ற 13 லட்சத்து 12 ஆயிரம் குடும்பங்கள் பயன் பெற்றார்கள். தமிழ்நாட்டில் 1 லட்சத்து 17 ஆயிரம் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ரூ.2ஆயிரத்து 715 கோடி கடனுதவிகளை தள்ளுப்படி செய்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்.

இதன் மூலம் 15 லட்சத்து 88 ஆயிரம் மகளிர் குழு உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளார்கள். மயிலாடுதுறை மாவட்டத்தில் 1217 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.13 கோடியே 70 லட்சம் கடன் தள்ளுப்படி செய்யப்பட்டுள்ளது. இன்றைதினம் 6 ஆயிரத்து 850 உறுப்பினர்களுக்கு ரூ. 51 கோடியே 31 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.86 கோடி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கி உள்ளார்கள்.

விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கடனுதவிகளை வாங்கி அவர்களுக்கு எல்லா வகையிலும் பக்கபலமாக கூட்டுறவு துறை செயல்பட வேண்டும். மயிலாடுதுறை மாவட்டத்திற்கு தேவையான அனைத்து நலத்திட்டங்களையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்தியாவில் யாரும் செயல்படுத்தாத திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் குடுமப தலைவிகளுக்கு மாதம் ரூ. 1000 வழங்கப்பட்டு வருகிறது. அதன் படி 1 கோடிய 13லட்சத்து 84 ஆயிரத்து300 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்பட்டுத்தபட்டுள்ளது. மாதாமாதம் ரூ. 1,000 குடும்பத் தலைவிகளுக்கு வழங்கி அனைத்து தரப்பு மக்களுக்கும் இத் திட்டத்தை கொண்டு சேர்த்துள்ளார்கள். தமிழ்நாட்டில் மக்கள் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சென்று எல்லா நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சுற்றுசூழல் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுதது றை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

அதைத் தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட கூடிய கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்களை வழங்கியும், கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நடைபெற்ற பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் பேட்டியில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை அமைச்சர் சிவ.வி.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் ஆகியோர் வழங்கினார்கள்.

விழாவில் மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (ஏ) ஏன். செல்வராஜ், ம.சுப்பராயன்,

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், மங்கை எம். சங்கர், ஞான.இமையநாதன், ப.முருகமணி, கு. வைத்திய நாதன், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், ஏ.ஆர். ராஜா,மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், ஒன்றியக்குழு தலைவர்கள் காமாட்சிமூர்த்தி, ஜெயபிரகாஷ், மகேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் பி.கென்னடி, காந்தி, நத்தம் வின்சென்ட், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம். கே.மருது, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தியாக.விஜயேஸ்வரன், சார்பு அணி இரா.மனோகரன் ராஜ்குமார் மற்றும் சுரேஷ், ரஜினி, முருகன், விவசாய அணி கோபி உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவில் ஆவின் பால் பண்ணையில் கொள்முதலை அதிகரிக்க நடவடிக்கை!

குமரி, நவ.20-

நாகர்கோவில் கே.பி. ரோட்டில் அமைந்துள்ள ஆவின் பால் பண்ணையில் பால் உற்பத்தி மற்றும் மேம்பாட்டு துறை இயக்குநர் வினித் திடீர் ஆய்வு மேற்கொண்டார். தினமும் பால் கொள்முதல், பால் பாக்கெட் விற்பனை சரிவர நடைபெறுகிறதா என்றும், பால் உப பொருட்கள், பால் கோவா, தயிர், மோர், குல்பி, சாக்லேட் போன்றவை உரிய முறையில் தயாரிக்கப் படுகிறதா என ஒவ்வொரு பிரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள். பால் கொள்முதல் அதிகரிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

உடனடியாக பால் உற்பத்தி அதிகரிக்க கறவை மாடு கடன் பெற்றவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட இலக்கினை அடைய வேண்டும் என்று எடுத்துரைத்தார். பால் பண்ணையில் உள்கட்டமைப்புகளில் சில மாற்றங்கள் செய்திடவும் ஒவ்வொரு பிரிவிலும் பணிகள் ஒரே சீரான முறையில் உரிய பால் பண்ணையின் அமைப்பின்படி செயல்படுத்த அறிவுறுத்தினார்

பால் உற்பத்தி அதிகரிக்கவும், பால் கொள்முதல் செய்வதே உறுதிப்படுத்தி செயல்படுத்திடவும், பொது மக்களுக்கு பால் பாக்கெட் மற்றும் பால் உபப்பொருட்கள் தங்குதடையின்றி அனைத்து பகுதியிலும் கிடைத்திட அறிவுறுத்தினார்.

பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடு கடன் பால் உற்பத்தி நிலையங்களை தரமான பால் சங்கத்திற்கு கடன்கள் வழங்க இயக்குநர் அறிவுறுத்தினார்.




தஞ்சாவூர் மாவட்டம், கூட்டுறவுத்துறை சார்பில் நடைபெற்ற 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு சான்றிதழையும், சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு பரிசுகளையும் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப், அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன், சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, செ.இராமலிங்கம் எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ. (துஞ்சாவூர்), மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துனைத்தலைவர் எஸ்.கே.முத்துசெல்வம், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.11.2023) சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை வாங்கிடும் வகையில் மதி அனுபவ அங்காடி கட்டிடத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் (பொ) / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்க அலுவலர் திருமதி. சித்ரா விஜயன், மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர் (பொ), இணை இயக்குநர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறையில் நடைபெற்ற 70 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு கடனுதவியை சுற்றுசூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஷ்வரி சங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் ஜெயபிரகாஷ், மகேந்திரன், காமாட்சிமூர்த்தி, மற்றும் பலர் உள்ளனர்.

### மேற்குவங்கத்தில் உள்ள மத்திய பல்கலைக் கழகத்திற்கு பிரதமர் - வேந்தர் பொறுப்பு வகிக்கும் போது

# தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு - முதல்வர் வேந்தராகக் கூடாதா?

## சட்டப் பேரவையில் - உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி விளக்கம்!

**சென்னை, நவ. 20-**

**சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், பல்கலைக் கழகங்களுக்கு முதல்வர் வேந்தராகப் பொறுப்பு வகிக்க வகை செய்யும் சட்ட மசோதா தொடர்பான விவாதத்துக்குப் பதிலளித்த உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, "மேற்குவங்கத்தில் உள்ள மத்தியப் பல்கலைக் கழகத்திற்கு பிரதமர், வேந்தராகப் பொறுப்பு வகிக்கும் போது, தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு முதலமைச்சர் வேந்தராகக் கூடாதா?" என வினா தொடுத்தார்.**



சட்டப் பேரவையில் நேற்று உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, இதுகுறித்து குறிப்பிட்டதாவது:-

வேந்தர்கள் ஏதோ தேர்ந்தெடுக்கப்பட்டவர்களெல்லாம் இருக்கக் கூடாது என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) அரசியல் இருக்கக் கூடாது என்று சொன்னீர்கள். ஆனால், ஓர் உதாரணத்தை நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மேற்கு வங்கத்தில் இருக்கக்கூடிய மத்திய பல்கலைக்கழகத்தினுடைய வேந்தரே இந்திய நாட்டினுடைய பிரதமராக இருப்பவர்தான். அன்பிற்குரிய மோடி அவர்கள்தான் அதனுடைய Chancellor ஆக இருக்கிறார்கள். இது எப்படி நடந்தது?

ஆக, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் அவர்களுடைய மாநிலத்தில்கூட அல்ல, West Bengalல் இருக்கக்கூடிய மத்திய பல்கலைக்கழகத்தினுடைய வேந்தராக இருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு வழிவகுக்கிற சட்டம் இதற்கு வழிவகுக்காதா? (மேசையைத் தட்டும் ஒலி) குஜராத் மாநிலத்திலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் அங்குள்ள முதலமைச்சர் அவர்கள்தான் துணை வேந்தராக இன்றும் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இங்கே வேந்தராக இருக்கிறார்கள்.

குறிப்பாக, தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலெல்லாம் துணை வேந்தர்களை முதலமைச்சர், அந்த அரசு யாரை பரிந்துரை செய்கிறதோ அவர்களைத்தான் துணை வேந்தராக நியமிக்க வேண்டுமென்கிற சட்டங்களும் அங்கே இருக்கின்றன. ஆகவே, அந்த அடிப்படையிலேதான் நாங்கள் இதை வலியுறுத்துகிறோம்.

அரசமைப்புச் சட்டத்திலே இதைப் பற்றியெல்லாம் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசமைப்புச் சட்டமே இதற்கான வழிவகைகளை வகுத்திருக்கிறது என்பதுதான் உண்மை. அந்த உணர்வோடு உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் இருக்கிற அனைத்து பல்கலைக்கழகங்களினுடைய வேந்தராக இருந்தால்தான் இங்கு உண்மையான எல்லாம் நடைபெறும் என்பதை நான் உங்களுக்கு மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய கல்விக் கொள்கையைப் பற்றியெல்லாம் இங்கே பேசினீர்கள். அதைப் பற்றி பேச வேண்டுமென்று சொன்னால், debateஐ பெரிய அளவில் நடத்தலாம். தேசிய கல்விக் கொள்கையில், 3 ஆம் வகுப்பிற்கு நுழைவுத் தேர்வு, 5 ஆம் வகுப்பிற்கு நுழைவுத் தேர்வு மற்றும் 8 ஆம் வகுப்பிற்கு நுழைவுத் தேர்வு என்றெல்லாம் சொல்லியிருப்பதை முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த போதே ஒரு குழுவை நியமித்து, மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆகவே, அவற்றையெல்லாம் கண்டித்து, இன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டினுடைய கல்விக் கொள்கையை வளர்ப்பதற்காக, தமிழக மாநில கல்விக் கொள்கையை வளர்ப்பதற்காக ஒரு குழுவை நியமித்து, அதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உறுப்பினர் அவர்கள் இந்தக் கல்விக் கொள்கையை பொறுத்தவரையில், உயர் கல்வியாக இருந்தாலும், பள்ளிக் கல்வியாக இருந்தாலும் தமிழ்நாடு அரசுதான் அனைத்திலும் சிறந்து விளங்குகிற ஒரு மாநிலமாக இதுவரை திகழ்ந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து திகழும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் உயர் கல்வித் துறைச் செயலாளர் அவர்கள் முதலிலேயே சிண்டிகேட் உறுப்பினராக இருக்கின்றார். ஏன் என்றால், பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் மத்திய அரசு நிதி வழங்க வேண்டியிருப்பதால், நிதித் துறைச் செயலாளர் அவர்களையும் சிண்டிகேட் உறுப்பினராக நியமிக்க வேண்டுமென்று தீர்மானத்தில் உள்ளது.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி குறிப்பிட்டார்.



விழுப்புரம் நகரம், வண்டிமேடு வார்டு செயலாளர் சுகுவின் தந்தையின் திருவுருவப்படத்திற்கு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் நா. புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், தொ.மு.ச நிர்வாக பணி சங்க செயலாளர் வாலிபால் மணி, நகர உறுப்பினர்கள் உஷாராணி மோகன், செ.அமர்ஜி, பத்மநாபன், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எவரெஸ்ட் மு. கணேசன்

### நவம்பர் 20 (2011)



பள்ளி பருவத்திலேயே இந்தி திணிப்பை எதிர்த்து போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

தி.மு.க. இளைஞர் அணி துவங்கிய நாளிலிருந்து இளைஞர் அணியின் வளச்சிக்கு பணியாற்றிய அவர், ஈரோடு மாவட்டத்தின் முதல் இளைஞர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதோடு, தொடர்ந்து மூன்று முறை அப்பொறுப்பை வகித்தவர்.

தி.மு.க. இளைஞர் அணி மாநில துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர். 1989ஆம் ஆண்டு கழக அரசின் சாதனை விளக்க இளைஞர் அணி பேரணியில் சிறப்பாக பணியாற்றியமைக்காக தலைவர் கலைஞர் அவர்களிடம் விருது பெற்றார்.

ஈரோடு மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் இளைஞர் அணி கிளையை அமைத்தவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### அரசியல் செய்வதற்கு அல்ல ஆளுநர் பதவி!

# ஆளுநர் அரசியல் சட்டத்தை மதித்து நடந்து கொள்ள வேண்டும்!

## சட்டப் பேரவையில் - சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி விளக்கம்!

**சென்னை, நவ. 20-**

**சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், விவாதங்களின் இடையே குறுக்கிட்டு விளக்கமளித்த சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, 'மாநில அரசு சட்டப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பும் சட்ட மசோதாக்களுக்கு எல்லாம் அனுமதி அளிக்காமல் அரசியல் செய்து கொண்டிருப்பதற்கா ஆளுநர் பதவி?' என்று கேள்வி எழுப்பினார்.**

**மேலும் அமைச்சர் எஸ்.ரகுபதி, "ஆளுநர் அரசியல் சட்டத்தை மதித்து நடந்து கொள்ள வேண்டும்!" என்று குறிப்பிட்டார்.**



சட்டப் பேரவையில், நேற்று முன்தினம், இது குறித்து சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டதாவது:-

கல்வி, பொதுப் பட்டியலில் இருக்கின்ற காரணத்தினால்தான் 'நீட்' விலக்கு போன்றவற்றிற்கெல்லாம் விலக்கு கோரி இங்கே தீர்மானம் நிறைவேற்றி, ஆளுநர் அவர்கள் மூலமாக குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது பொதுப் பட்டியலில் இருக்கிறது. இப்போது இங்கே இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபடி, நம்முடைய ஆளுநர் அவர்கள் இங்கே அரசியல் செய்வதற்காக ஆளுநர் அல்ல. அவர் அரசியல் சட்டத்தை மதித்து நடந்து கொள்வாரேயானால் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள். ஆனால், ஆளுநர் அவர்கள் இன்றைக்கு அந்தப் பதவியை அரசியல் சட்டத்தில் நீடிப்பதில்எந்தப்பிரச்சினையும் கிடையாது. ஆனால், அவர் இன்றைக்கு அரசியல் செய்கின்றவராக இருக்கின்ற காரணத்தினால்அத்தோடு இல்லாமல் இன்றைக்கு பல நீதிமன்றங்களுடைய தீர்ப்புகள் உங்களுக்கு இருக்கின்றன.

உச்ச நீதிமன்றத்தினுடைய முன்னாள் தலைமை நீதிபதி Madan Mohan Punchhi தலைமையிலான commission 2007 ஆம் ஆண்டில் கொடுத்துள்ள பல்கலைக்கழக வேந்தர்கள் நியமனம் குறித்து அளித்துள்ள பரிந்துரையை இந்த நேரத்தில் இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அது Para 4, 5, 12 என்ற பரிந்துரையில் *'To be able to discharge the Constitutional obligations fairly and impartially, the Governor should not be burdened with positions and powers which are not envisaged by the Constitution and which may expose the office to controversies or public criticism.'* என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு *'Making the Governor the Chancellor of the Universities and thereby conferring powers on him which may have had some relevance historically has ceased to be so with change of times and circumstances. The Council of Ministers will naturally be interested in regulating University education and there is no need to perpetuate a situation where there would be a clash of functions and powers.' The Commission is also of the view that the Governor should not be assigned functions casually under any state statute. His role should be confined to the constitutional provisions* என்று பரிந்துரைத்துள்ளது. இது ஒன்று.

அடுத்து, ஆளுநர்கள் வேந்தர்களாக நியமிக்கப்படுகிறார்கள் என்று இன்றைக்கு சொல்லியிருக்கிறார்கள். குஜராத் மாநிலத்தில் முதன்முதலில் நியமித்தது பாரதிய ஜனதா கட்சிதான். நீங்கள்தான் முதன்முதலில் நியமித்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு withdraw செய்திருக்கிறீர்கள். இன்றைக்கு தெலுங்கானாவில் ஆளுநரை நியமிக்கின்ற உரிமை அந்த மாநில அரசுக்கு இருக்கிறது. கர்நாடகா மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்களினுடைய துணைவேந்தர்களை நியமிக்கின்ற உரிமை, தெலுங்கானாவில் துணை வேந்தர்களை நியமிக்கின்ற உரிமை அந்தந்த மாநில அரசுக்கு இருக்கிறது. அதைப்போல, கர்நாடகா மாநிலத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, அந்த மாநில அரசினுடைய பரிந்துரைகளின் அடிப்படையிலேதான் துணை வேந்தர்களை நியமிக்க வேண்டுமென்கிற சட்டம் அங்கு இயற்றப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, குஜராத் மாநிலத்திலும் மாநில அரசுதான் துணை வேந்தர்களை நியமிப்பது என்றிருந்தது. அதுதான் மாற்றப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு எங்களைப் பொறுத்தவரைக்கும், நிறைய மாநிலங்களில் ஆளுநர்கள் மூலமாக பல்கலைக்கழகங்களினுடைய துணை வேந்தர்கள் நியமிக்கப்பட்டால் இன்றைக்கு, அவர்களுடைய choiceபடி துணை வேந்தர்களை தேர்ந்தெடுக்கின்ற சூழ்நிலை மக்கள் விரும்புகின்றபடி அவர்கள் இல்லை. எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசுக்கு எதிராகச் செயல்படுபவராகக்கூட மாறிவிடுவார்கள். எனவேதான் துணை வேந்தர்களை நியமிக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு வேண்டுமென்ற கோரிக்கையை முதலமைச்சர் அவர்களுடைய அரசு முன்வைத்திருக்கிறது.

ஆன்லைன் ரம்மியை தடை செய்வதைப் பொறுத்தவரைக்கும், ஆளுநர் அவர்கள் அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லையென்று சொன்னார்கள். ஆனால், அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு என்பதை இன்றைக்கு நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அவர் அதிகாரம் இல்லையென்று சொன்னார், இன்றைக்கு அதிகாரம் இருக்கிறது என்று நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது தவிர, பல்வேறு விவாதங்களையெல்லாம் இன்றைக்கு appeal செய்தால், அதைப் பற்றி அங்கே விவாதிக்கலாம். இங்கே நாம் அதைப் பற்றி விவாதிக்கக் கூடாது.

ஏனென்றால், அவற்றை நாங்கள் பலவகைகளில் எடுத்துச் சொல்லியிருக்கின்றோம். ஆனால், நீதிபதிகளை திருப்திப்படுத்துகின்றவகையிலே, எங்களுடைய வாதங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் கூட, அந்த வாதங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே, நிச்சயமாக உச்ச நீதிமன்றத்தில் அதற்குரிய நியாயம் கிடைக்குமென்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. ஆன்லைன் சூதாட்டம்என்பதுதடைசெய்யப்படவேண்டுமென்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்.

# பெரம்பலூரில் 'நீட் விலக்கு - நம் இலக்கு' கையெழுத்து இயக்கம்!

பெரம்பலூர் ,நவ.20-

பெரம்பலூர் மாவட்டம்,பாடாலூரில் ஆலத்தூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் நீட் விலக்கு, நம் இலக்கு கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

நீட் விலக்கு, நம் இலக்கு' என்ற தலைப்பில் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துக்கள் பெற தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுக்கா, பாடாலூரில் ஆலத்தூர் மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் நீட் விலக்கு, நம் இலக்கு கையெழுத்து இயக்கம், பெரம்பலூர் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம்.சி.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் வல்லபன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளர் கேசவன் கலந்து கொண்டு நீட் விலக்கு, நம் இலக்கு என்ற கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். இதில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் என ஆயிரக் கணக்கானோர் ஆர்வத்துடன் பங்கேற்று ஏழை, எளிய அரசு பள்ளி மாணவர்களின் மருத்துவ கனவை சிதைக்கும், நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரும் மசோதாவிற்கு இந்திய ஜனாதிபதி விரைந்து ஒப்புதல் வழங்க வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்திட்டனர். கையெழுத்திடப்பட்ட அனைத்து கடிதங்களும் தி.மு.க. தலைமைக்கு அனுப்பப்பட்டு, பின்னர் இந்திய ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். முன்னதாக, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளரும், மாவட்ட கவுன்சிலருமான சோமு. மதியழகன் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர்கள் சுதா, விஜய், கிளை கழக செயலாளர்கள் துரைசாமி, செந்தில்குமார், மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், இளைஞரணி, மகளிர் அணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் திரளாக கலந்து கொண்டனர். முன்னதாக, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அருண் அனைவரையும் வரவேற்றார். முடிவில் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஆனந்த் நன்றி கூறினார்.


**தமிழ்நாடு அரசு**

**பொதுப்பணித்துறை - கட்டட அமைப்பு - ஒப்பந்த முறை : மொத்தத் தொகை**

**மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு எண். 42/ TVM- CLE / 2023 - 2024/ Dated. 16.11.2023**

கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் திருவண்ணாமலை பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட சிறப்பு தலைமைப் பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிக்கு 08.12.2023 அன்று இறுதி நாளாக கொண்டு அலுவலக நேரப்படி பிற்பகல் 3.00 மணிவரையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. http://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 23.11.2023 முதல் 08.12.2023 அன்று பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதிகாண் படிவம் என குறிக்கப்பட்ட உறை (உறை எண்.1) மட்டும் 08.12.2023 அன்று Server System நேரப்படி பிற்பகல் 4.00 மணியளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ஜி.எஸ்.டி. உட்பட (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட) |
|---|---|---|---|---|
| 1. | திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அரசு மருத்துவமனையில் புதிய TAEI (தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையம்) கட்டடம் கட்டும் பணி. | 279.00 | ரூ.1,49,500/- | 8 மாதங்கள் |

ஒப்பந்தக்காரர் தகுதி : வகுப்பு III மற்றும் அதற்கு மேல்.

முன் வைப்புத் தொகைகளை இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். விலை வீத மாறுதல் (Price Adjustment Clause) மேற்காணும் பணிக்கு பொருந்தும்.

இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 6082 / ஒப்பந்தப்புள்ளி /2023

சிறப்பு தலைமைப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ) வட்டம், திருவண்ணாமலை -4




தருமபுரி மேற்கு மாவட்டம்,பாப்பிரெட்டிப்பட்டி கோபாலபுரம் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை பணியினை மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் பால்ப்ரின்ஸி ராஜ்குமார், மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன், ஆலை மேலாண்மை இயக்குனர் திருமதி.பிரியா, ஒன்றியச் செயலாளர்கள் பி.எஸ்.சரவணன், முத்துக்குமார், சந்திரமோகன், சௌந்திரரசு, பேரூர்க் கழகச் செயலாளர் முல்லை.ரவி, ஒன்றியக் குழு தலைவர் உண்ணாமலை குணசேகரன், ஒன்றியக் குழு உறுப்பினர் தாமோதரன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் அமைப்புக்களான மாணவரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் நேர்காணல் சட்டத்துறை அமைச்சர், தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி தலைமையிலும், கழக மாணவரணி இணைச் செயலாளர் பூவை சி.ஜெரால்டு, கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வீரமணி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் ஆகியோர் முன்னிலையிலும் புதுக்கோட்டையில் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ராஜா பெரியண்ணன், ராஜமாணிக்கம், ஆர்,எம்.கே.கார்த்திக், ஜெய.கிருஷ்ணராஜ், உதயசூர்யா கைலாசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.11.2023) சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை அனைத்துத் தரப்பினரும் வாங்கிடும் வகையில் மதி அனுபவ அங்காடி கட்டிடத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் (பொ) / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்க அலுவலர் திருமதி. சித்ரா விஜயன் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர் (பொ), இணை இயக்குநர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. ஐ.சி.எப். லேபர் யூனியன் பொதுச்செயலாளர் வ. முரளிதரன் முன்னிலையில்

# பி.ஹரிநாத் பாபு பணி நிறைவு பாராட்டு விழா!

## நாடாளுமன்ற உறுப்பினர் இரா. கிரிராஜன் பங்கேற்பு!

சென்னை, நவ.20 -

தி.மு.க. ஐ.சி.எப்.லேபர் யூனியன் சார்பில் பணி ஒய்வு பெறும் ஊழியர்களுக்கு பாராட்டு விழா ஐ.சி.எஃப். வ.முரளிதரன் முன்னிலையில் நடைபெறும் விழாவில் மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கலந்து கொண்டு பாராட்டுகிறார்.

ஐ.சி.எப், இரயில் பெட்டி தொழிற்சாலையில் 31 ஆண்டுகள் பணியாற்றி ஒய்வு பெறவுள்ள தி.மு.க ஐ.சி.எப் லேபர் யூனியனை சார்ந்த பி.ஹரிநாத் பாபு பணி நிறைவு பாராட்டு விழா வரும் 29.11.2023 அன்று 11.30 மணிக்கு ஐ.சி.எப் தெற்கு காலனியில் உள்ள குறிஞ்சி நன் நல மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கழக சட்டத் திருத்தக் குழுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.கிரிராஜன் கலந்து கொண்டு வாழ்த்தி பேசுகிறார்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க ஐ.சி.எப் லேபர் யூனியன் பொது செயலாளரும், கொளத்தூர் கிழக்குப் பகுதி செயலாளருமான ஐ.சி.எப் வ.முரளிதரன், யூனியன் தலைவர் கே. ரமேஷ், பொருளாளர் டி.தமிழ்வாணன்(எ) நேரு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்ச்சியில் பி.துரை ராஜ், எஸ்.ஆனந்தசூரியன், எம்.கே.பி.உதயசூரியன், ப.பொற்செழியன், ஆர். சிவசாமி, பி.ராஜேந்திரன், ஏ.சத்தியபிரகாஷ், எஸ். ஜெயகுமார், எம்.திருப்பதி, ஆர்.மாறன், டி.ராஜா, எம்.சாரங்கபாணி, ஈ.கபிலன், ஆர்.ரகுபதி, மா.அகிலன், க.விஜயகுமார், எஸ். சுந்திரகணபதி, வி.ரவி, எஸ்.சத்யநாராயணன் எம்.கே.குமரேசன், எம். சுரேஷ்பாபு.வின்சன்ட், ந.கரையரசன், பி.துரை பாபு பி.மாசிலாமணி, டி.வினோத் வி.பரணி குமார், எஸ்.ராஜகுமார், சி. பார்தசாரதி, டி.பிரபு, ஏ. லட்சுமிநாராயணன், கே. நடராஜன், சித்ரஞ்சன்சிங், ஆர்.மாறன், எஸ்.ராஜசேகர், எஸ்.முருகன், காலணி மெம்பர்கள் மற்றும் யூனியன் நிர்வாகிகள் அகியோர் கலந்து கொண்டு பாராட்டுகிறார்கள்.விழா முடிவில் பி.ஹரிநாத் பாபு நன்றி கூறுகிறார்.

திருப்பத்தூர் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# கலைஞர் திரைப்பட வசனம் -கவிதை ஒப்பித்தல் போட்டி!

## அமைச்சர் எ.வ.வேலு – மாவட்டச் செயலாளர் தேவராஜ் சிறப்புரை!

திருப்பத்தார், நவ. 20 -

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின், நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் 9, 10, 11, 12 ஆம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கான கலைஞர் திரைப்பட வசனம் மற்றும் கவிதை ஒப்புவித்தல் போட்டி 24.11.2023 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆம்பூர் பிரியா மகாலில் ஆசிரியர் சி .குணசேகரன் தலைமையிலும், ஆம்பூர் பொய்யாமொழி வரவேற்பிலும் நடை பெறுகிறது.

ஆர்.காளியப்பன், ஜெகநாதன், வி.அன்பழகன், பி.மோகன், எஸ்.வாசுதேவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அமைச்சர் எ.வ.வேலு, மாவட்டச் செயலாளர் க. தேவராஜி எம்.எல்.ஏ., டி.எம்.எதிர்ஆனந்த் எம்.பி., சி.என்.அண்ணாதுரை எம்.பி., கே.வி.குப்பம் கோபி, அச.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ., அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்பு ரையாற்றுகின்றனர்.

ஆர்.எஸ்.ஆனந்தன், டி.கே.மோகன், ஏ.சம்பத்குமார், சாந்தி சீனிவாசன், கே.பி.ஆர். ஜோதிராஜன், ம. தமிழ்ச்செல்வி, சூரியகுமார், எஸ்.ராஜேந்திரன், கே.புரு ஷோத்தமன், பி.எம்.முனிவேல் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள், அணகளின் நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

சாமுவேல் கிறிஸ்டோபர் நன்றி கூறுகிறார்.

கும்முடிப்பூண்டி தொகுதி கழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# கி.வேணு மறைவுக்கு - சட்டப் பேரவையில் இரங்கல்!

சென்னை, நவ. 20-

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் கும்மிடிப்பூண்டி தொகுதி கழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கி.வேணு மற்றும் மூன்று உறுப்பினர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

பேரவைத் தலைவர் அவர்கள், இதுகுறித்து படித்த குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான கி. வேணு அவர்கள் 20-10-2023 அன்றும், பி. வெங்கடசாமி அவர்கள் 21-10-2023 அன்றும், பா. வேல்துரை அவர்கள் 24-10-2023 அன்றும் மற்றும் தோப்பூர் திருவேங்கடம் ஆகியோர் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கி.வேணு 1989-1991 மற்றும் 1996-2001 ஆகிய ஆண்டுகளில் கும்மிடிப்பூண்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்.

பி.வெங்கடசாமி 1967-1971, 1971-1976 மற்றும் 1996 -2001 ஆகிய ஆண்டுகளில் ஒசூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்.

பா.வேல்துரை 1996-2001 மற்றும் 2006-2011 ஆகிய ஆண்டுகளில் சேரன்மாதேவி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.

தோப்பூர் திருவேங்கடம் 1969-1971 ஆம் ஆண்டுகளில் கணியம்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

கம்பம் நகர 27வது வார்டு கவுன்சிலர்

# ஏ.விருமாண்டி தாயார் முத்துப்பேச்சி (எ) அம்மாபிள்ளை மறைவு!

## மாவட்டச் செயலாளர்கள் என்.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. - தங்க தமிழ்ச்செல்வன் அஞ்சலி



கம்பம், நவ.20-

கம்பம் நகர்மன்ற 27வது வார்டு தி.மு.க. உறுப்பினரும், கழக முன்னோடியுமான ஏ.விருமாண்டி தாயார் முத்துப்பேச்சி என்ற அம்மா பிள்ளை வயது (105), அவர்கள் நேற்று முன்தினம் (18.11.2023) பிற்பகல் மறைவு எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது உடலுக்கு தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் என். இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் கம்பம் இரா.பாண்டியன், தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ் செல்வன் பி.தெய்வேந்திரன், எம்.பி., தேர்தல் பணிக் குழு செயலாளர்மு.ஜெயக்குமார் தீர்மானக்குழு இணை செயலாளர், தேனி மாவட்ட துணை செயலாளர் குரு. இளங்கோ கம்பம் வடக்கு நகர செலயாளர் எம்.சி. வீரபாண்டியன், கம்பம் தெற்கு நகர பொறுப்பாளர், பி. பால்பாண்டி ராஜா, கம்பம் நகர்மன்ற தலைவர் வனிதா நெப்போலியன், கம்பம் ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி, கம்பம் நகர முன்னாள் பொறுப்பாளர் வழக்கறிஞர் துரை.நெப்போலியன், தொழில் அதிபர் எம்.ஏ., அரசேந்திரன்,

கம்பம் நகர்மன்ற முன்னாள் தலைவர் எஸ்.டி.டி. இளங்கோவன், கம்பம் தெற்கு நகர துணை செயலாளர் தக்காளி டி.செல்வம், தேனி தெற்கு மாவட்ட சுற்றுசூழல் மாவட்ட துணை அமைப்பாளர் பி. தங்கப்பாண்டியன், தேனி மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் இந்திரா கர்ணன், குரு.குமரன் தேனி தெற்கு மாவட்ட தொழிலாளர், அணி அமைப்பாளர், பேச்சாளர் எஸ். முருகேசன், தேனி தெற்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர், தேனி தெற்கு மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர், பொன்.விஜய், எஸ். சாதிக் பட்சா பிஸ்மி மெடிக்கல், சி.எம்.உதயக்குமார் தேனி தெற்கு மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர், பி.தென்னரசு தேனி தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர், கம்பம் நகர வடக்கு துணை செயலாளர் எஸ்.பி.சுருளி,

கம்பம் தெற்கு நகர தெற்கு நகர அவைத் தலைவர் ஏ.ராஜன், பொறியாளர் ஜெ.ராம்குமார், சுருளிப்பட்டி மொக்கராசு, ஓ.பி. பாண்டியன், எஸ்.எம். பாண்டியன் முன்னாள் நகர அவைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், சுல்தான் சல்மான் பாரிசி, எஸ்.டி. மணிகண்டன், ராஜா, அமுதா எபிநேசர், நல்லபெருமாள் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர், சி.பி.எம். ஏரியா செயலாளர் தோழர் லெனின், தோழர் பன்னீர், தோழர் மோகன், வாழைப்பழ கடை கே.ராஜ்குமார், டி.மணிகண்டன் 33 வது வார்டு செயலாளர், பன்னீர் மற்றும் அனைத்துக் கட்சி தோழர்களும், கழக முன்னோடிகளும் பெருந்திரளாக கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர்.

மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார்,

# சங்கரய்யா மறைவுக்கு - சட்டப் பேரவையில் இரங்கல்!

சென்னை, நவ. 20-

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி பீடத்தின் நிறுவனர் பங்காரு அடிகளார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யா ஆகியோரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

சட்டப் பேரவையில் நேற்று, பேரவைத் தலைவர் பி.அப்பாவு அவர்கள், இதுகுறித்து படித்த இரங்கல் குறிப்பு வருமாறு:-

**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் பங்காரு அடிகளார்!**

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் பங்காரு அடிகளார் அவர்கள் 19-10-2023 அன்று தமது 82 வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

ஆதிபராசக்தி பீடத்தை நிறுவி, அரை நூற்றாண்டிற்கும் மேலாக ஆன்மிகத் தொண்டாற்றுவதில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டவர். மேலும், கல்வி, மருத்துவம் உள்ளிட்ட தொண்டு நிறுவனங்கள் துவங்கி சமூக சேவைகளை வழங்கிய பங்காரு அடிகளார் அவர்கள் 'பத்மஸ்ரீ' விருது பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், பக்தர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

**விடுதலைப் போராட்ட வீரர் - இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் முதுபெரும் தலைவர் என். சங்கரய்யா!**

பொதுவுடைமைப் போராளியும், விடுதலைப் போராட்ட வீரரும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் முதுபெரும் தலைவருமான என். சங்கரய்யா அவர்கள் 15-11-2023 அன்று தமது 102வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு இந்திய நாட்டுக்காகவும், உழைக்கும் வர்க்கத்தினருக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்த என்.சங்கரய்யா அவர்கள் இந்திய விடுதலைக்கு முன்பே தேசியம் சார்ந்த செயல்பாடுகளால் பலமுறை சிறைக்குச் சென்றவர். 1967-1971 ஆம் ஆண்டுகளில் மதுரை மேற்குத் தொகுதியிலிருந்தும், 1977-1980 மற்றும் 1980-1984 ஆகிய ஆண்டுகளில் மதுரை கிழக்குத் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர். இவரது மகத்தான சேவையைப் பாராட்டி, 2021 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு இவருக்கு 'தகைசால் தமிழர்' விருதை வழங்கி கௌரவித்தது. அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், கட்சித் தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிஞர் பொன்னிவளவன்

**நவம்பர் 20 (1998)**



தி.மு.க. இலக்கிய அணியின் தலைவராக பணியாற்றியவர்.

"கவியரங்குகள் பலவற்றில் பொன்னிவளவன் பாடிய கவிதைகள் எப்போதும் தன்மானத் தமிழர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். சாகாத கவிஞர்களின் வரிசையிலே இணைந்துவிட்ட அந்த உடன்பிறப்பை கழகமும், கழகக் கண்மணிகளும் என்றும் மறந்திட இயலாது" என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தூத்துக்குடி நீதிமன்றத்தில் சட்ட எரிப்பு வழக்கில் நீதிபதி முன்னர் கவிதை வாக்குமூலம் தந்து கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

நெருக்கடி காலத்தில் ஓராண்டு சிறைவாசம் இருந்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் "கலைஞர் விருது" பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர்

# எஸ்.வெங்கிடரமணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 20-

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் எஸ். வெங்கிடரமணன் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார். அதுவருமாறு :

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் எஸ்.வெங்கிடரமணன் (92) அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக மறைந்தார் என்றறிந்து வருத்தமடைந்தேன்.இந்திய ரிசர்வ் வங்கியின் 18ஆவது ஆளுநராகவும், அதற்கு முன்பாக 1985 89 வரையில் ஒன்றிய நிதித் துறைச் செயலாளராகவும் திறம்படப் பணியாற்றி நன்மதிப்பைப் பெற்றவர் வெங்கிடரமணன். அவரை இழந்து தவிக்கும் அவரது மகளும் முன்னாள் தலைமைச் செயலாளருமான திருமதி கிரிஜா வைத்தியநாதன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி எஸ்.ஏ.ஜி. ராபி

**நவம்பர் 20 (2004)**



திருச்சி நகரக் கழகச் செயலாளராக இரண்டு முறை பணியாற்றியவர்.

செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நெருங்கிய நண்பர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டவர்.

மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.11.2023) சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், முற்றம் மாத இதழினை தங்களின் இல்லத்திற்கே நேரடியாக அஞ்சல் வாயிலாக பெற்றிடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் இணையதளம் / கைப்பேசி செயலியினை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா நா. எழிலன் எம்.எல்.ஏ. அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் (பொ) / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்க அலுவலர் சித்ரா விஜயன், கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர் (பொ), இணை இயக்குநர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு மீன்வள பல்கலைக் கழகத்திற்கு ஜெயலலிதா பெயர் : ஒப்புதல் தராத ஆளுநரைக் கண்டிக்காமல்

# பா.ஜ.க.வுடனான தொடர்பு - பயம் காரணமாகவே அ.தி.மு.க. வெளிநடப்பு!

## தலைமைச் செயலகத்தில் – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!



**சென்னை, நவ. 19**

**தமிழ்நாடு மீன்வள பல்கலைக் கழகத்துக்கு அம்மையார் ஜெயலலிதா பெயரை அ.தி.மு.க. ஆட்சியில் வைத்தபோது அப்போதைய ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. இது தெரிந்தும் நொண்டி சாக்கு கூறி வெளிநடப்பு செய்துள்ளனர் அ.தி.மு.க.வினர். ஆனால் உண்மையில் பா.ஜ.க.வுடனான தொடர்பு காரணமாகவே அவர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியளித்தார்.**

நிதி மற்றும் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (18.11.2023) தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

இன்றைக்கு நடைபெற்றிருக்கக்கூடிய தமிழ்நாடு சட்டப்பேரவையினுடைய சிறப்புக் கூட்டத்தொடரில் ஆளுநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருக்கக் கூடிய 10 சட்ட முன்வடிவுகளை மீண்டும் பேரவையில் மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டு மீண்டும் இன்றைக்கு ஆளுநருக்கு அனுப்பப்பட இருக்கிறது.

அதன் மீதான விவாதத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் இன்றைக்கு உரையாற்றி ஆளுநர் எந்த அளவில் ஜனநாயக விரோத போக்கினை கையாண்டு, இந்த சட்ட முன்வடிவுகளுக்கு நீண்ட காலமாக தன்னுடைய ஏற்பினை அளித்திடாமல் அவர் வைத்திருந்தார் என்பதையும், இன்றைக்கு தன்னுடைய ஏற்பினை அளிக்காமல் அதைத் திருப்பி அனுப்பியிருக்கக்கூடிய சூழல்கள் குறித்தும் முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய தீர்மானத்தின் மீது கருத்துக்களை எடுத்து வைத்தார்.

ஆளுநருடைய நடவடிக்கைகள் சட்டப்பேரவையின் மாண்பிற்கும், இறையாண்மைக்கும் குந்தகம் விளை விக்கக்கூடிய வகையில் எந்த அளவிற்கு அமைந்திருக்கிறது என்பதையும், நாம் சுதந்திரத்திற்கு முன்பிருந்தும், அதற்கு பின்பும் கூட தமிழ்நாடு சட்டப்பேரவை நெடிய வரலாற்றில் நாம் கட்டிக்காத்து இருக்கக்கூடிய விழுமியங்க ளும், மாண்புகளும் தமிழ்நாடு ஆளுநரால் எவ்வாறு மீறப்பட்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு அற்புதமான உரையினை மிக நிதானமாக, மிகத்தெளிவாக, மிக மென்மையான, ஆனால் அதே சமயம் திடமாகவும், உறுதியாகவும் நம்முடைய பேரவையின் மாண்பையும், அரசினுடைய நிலைப்பாட்டையும் காக்கக்கூடிய வகையில் அவர்கள் எடுத்துரைத்தார்.

### நொண்டிச் சாக்கு!

இந்த விவாதத்தில், இறுதியாக பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தன்னுடைய கருத்துக்களை எடுத்து வைத்து விட்டு, இறுதியாக வெளிநடப்பு செய்வதற்கு முன்பாக, வெளிநடப்பு செய்வதற்கு வேண்டுமென்றே ஒரு காரணம் அவர்களுக்கு வலிந்து தேடி, கண்டுபிடித்து கொண்டு அதை முன் வைத்துக்கொண்டு இந்த தீர்மானம் நிறைவேற்றப்படும் போது அவையில் இருத்தல் கூடாது என்கின்ற காரணங்களுக்காக, அந்த கட்சியினுடைய காரணங்களுக்காக, வலிந்து ஒரு காரணத்தை கண்டுபிடித்து, தேடி (lame excuse என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்) நொண்டிச் சாக்கு என்று, அது உள்ளபடியே ஒரு நொண்டிச் சாக்கினை கண்டு பிடித்துக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சியின் அ.தி.மு.க. உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்து இருக்கிறார்கள்.

அவ்வாறு வெளிநடப்பு செய்வதற்கு முன்பாக அவர்கள் தெரிவித்து இருக்கக்கூடிய கருத்து, மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் பெயரில் அமைக்கப்பட்டு இருக்கக்கூடிய தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகத்திற்கு அந்த அம்மையா ருடைய பெயர் இல்லை அவர்களால் அவருடைய ஆட்சியில் 2020-ஆம் ஆண்டில் வைக்கப்பட்ட அந்த பெயர் இல்லாமலேயே இந்த சட்ட முன்வடிவு இங்கு கொண்டு வரப்படுகிறது, எனவே அந்த பெயர் இல்லாத காரணத்தால், நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று ஒரு காரணத்தைச் சொல்லி விட்டு அவர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.

அது எவ்வாறு தவறு, அது எத்தகைய பொய்ச் செய்தி என்பதை எல்லாம் நம்முடைய மீன்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள், அவையில் அந்தந்த மசோதாக்களுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறபோது விளக்க மளித்திருக்கிறார். அதனையொட்டி நானும், பத்திரிக்கையாளர்களான உங்கள் முன் இந்த உரிய விளக்கத்தினை அளிப்பதற்கு நான் விரும்பு கிறேன்.

தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2012 -ஆம் ஆண்டில் முதன்முறையாக உருவாக்கப்படுகிறது. அதாவது, 2012 -ஆம் ஆண்டுதான் இதற்கான பல்கலைக்கழகத்தை உருவாக்கி அதற்கான சட்ட முன்வடிவு அன்றைய தினம் இருக்கக்கூடிய ஆளுநருக்கு அனுப்பப்பட்டு ஏற்கப்பட்டு, அது சட்டமாகிவிடுகிறது. அதுதான் ஒரிஜினல் Act. அந்த சட்டம் வருகிறபோது, அது வெறும் மீன்வள பல்கலைக்கழகம். அதற்கு வேறு எந்த தலைவர் பெயரும் அப்போது இல்லை. அதுதான் ஒரிஜினல் Act. அதற்கு பின்பு 2020ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9ஆம் நாள், அதாவது 2012ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய மீன்வள பல்கலைக்கழகத்திற்கு 2020ஆம் ஆண்டில், இன்றைய எதிர்க்கட்சி தலைவராக இருக்கின்ற எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் ஜனவரி 9ஆம் தேதி ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறது. அந்த பல்கலைக்கழகத்திற்கு மறைந்த முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் பெயரை சூட்டி, அந்த பல்கலைக்கழகத்தின் பெயர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகம் என்று அவர்கள் உருவாக்குகிறார்கள். இந்த சட்ட முன்வடிவு 2020ஆம் ஆண்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

### தமிழ்நாடு அரசே துணை வேந்தர்களை நியமிக்கும்!

இந்த சட்ட முன்வடிவோடு சேர்த்து இந்த திருத்தங்களோடு சேர்த்து வேறு திருத்தங்களும் அவர்கள் செய்திருக்கிறார்கள். நாம் அதற்குள் போகவில்லை. ஆகவே, 2020ஆம் ஆண்டுதான் இந்த சட்ட முன்வடிவினை அவர்கள் மீண்டும் அம்மையாருடைய பெயரைச் சூட்டி ஆளுநருக்கு அனுப்பி வைக்கிறார்கள். ஆளுநர் அதற்கான ஒத்திசைவை தரவேயில்லை. இவர்கள் அம்மையாருக்காக பேர் இல்லை என்று சொல்லி விட்டு வெளிநடப்பு செய்கிறார்கள் அல்லவா? அதை அவர்கள் 2020லிருந்து 2021 வரை அந்த ஓராண்டு காலமும் ஆளுநருடைய பரிசீலனையில் வைத்திருந்தார். அதில் எந்தவிதமான ஒரு ஒப்புதலும் கொடுக்கவில்லை. அன்றைக்கு முதலமைச்ச ராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி அவர்களும், அவருடைய அமைச்சரவையும், அந்த கட்சியான அதிமுகவும், அந்த ஓராண்டு காலம் வரை அதற்கான எந்த ஒரு முன்னெடுப்புகளும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2020ஆம் ஆண்டில் அனுப்பினார்கள், 2021 வரை அப்படியேதான் இருந்தது.

2021ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு, முதலமைச்சர் அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு, 2023ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் தேதி அன்று நாம் ஒரு சட்ட முன்வடிவை கொண்டு வருகிறோம். அது என்ன சட்டம் கொண்டு வருகிறோம் என்று சொன்னால், ஆளுநர் துணைவேந்தர் நியமிப்பதற்கு பதிலாக தமிழ்நாடு அரசே துணைவேந்தர்களை நியமிக்கும் (Government of Tamil Nadu will appoint the Vice Chancellor) என்கின்ற அந்த திருத்தத்தை நாம் கொண்டு வருகிறோம்.

இந்த திருத்தத்தை நாம் எதற்கு கொண்டு வருகிறோம் என்றால், முதன்முதலாக கொண்டு வந்த ஒரிஜினல் Act 2012ஆம் ஆண்டில் தான் நாம் அதை கொண்டு வரமுடியும். என்னவென்று கேட்டால், நடுவில், 2020ஆண்டில் ஆளுநர் அவர்களுக்கு அன்றைய அதிமுக ஆட்சியில் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, அனுப்பப்பட்ட அந்த மசோதாவிற்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கவில்லை. அந்த பெயர் மாற்றமும் நடைமுறைக்கு வரவில்லை. எனவேதான், 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் சட்ட முன்வடிவை நிறைவேற்றுகிறபோது, அந்த ஒரிஜினல் Act 2012ல் இருக்கக்கூடியதுபோல, அரசாங்கம் தான் துணைவேந்தர்கள் நியமிக்கவேண்டும் என்று நாம் கொடுத்தோம்.

அதற்குப் பிறகு, ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பிய 10 மசோதக்களில், நாம் அனுப்பிய மசோதா, 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் நாள் அந்த சட்ட முன்வடிவையும், அதேபோல 2020ல் அம்மையார் பெயர் சூட்டி அனுப்பப்பட்ட அந்த மசோதாவையும் ஆளுநர் இப்போதுதான் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். அம்மையாருடையபெயர் சூட்டியதை ஆளுநர் அவர்களால் நிராகரிக்கப்பட்டு அந்த சட்ட முன்வடிவும் நம்மிடத்தில் இன்றைக்கு திரும்பி வந்திருக்கிறது. அதேபோல, கடந்த ஏப்ரல் மாதம் அனுப்பியிருக்கக்கூடிய துணைவேந்தர்களை அரசே நியமனம் மேற்கொள்ளும் என்ற அந்த மசோதாவும் நம்மிடம் வந்திருக்கிறது.

நாம் இந்த இரண்டு மசோதாக்களையும் இன்றைய சட்டப்பேரவையில் எந்த மாற்றமும் செய்யாமல் மறுபடியும் சரிப்படுத்தி, உடனடியாக அனுப்புகிறோம். இன்றைக்கு நம்முடைய முதலமைச்சருடைய தலைமையில் இருக்கக்கூடிய இந்த அரசுதான், அம்மையாருடைய பேர் சூட்டப்பட்டிருக்கக்கூடிய அந்த சட்ட முன்வடிவை ஆளுநர் தன்னுடைய ஒத்திசைவை அளிக்காமல் திருப்பி அனுப்பியிருந்தாலும்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எந்தவித காழ்ப்புணர்வுகளை காட்டாமல், அந்த மசோதாவையும் மீண்டும் இன்றைக்கு சட்டப் பேரவையில் அம்மையாருடைய பேர் சூட்டப்பட வேண்டும் என்கின்ற அந்த மசோதாவையும் வைத்து இன்றைக்கு கொடுக்கிறோம்.

### பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது!

ஒரு பொய்யான காரணத்தை என்ன, ஏது என்று புரிந்து கொள்ளாமலும் அல்லது புரிந்துகொண்டு வேண்டுமென்றே ஏதாவது ஒரு நொண்டிச் சாக்கை கண்டுபிடித்து வெளியே சென்றிருக்கிறார்கள். இது வேறு ஒன்றுமல்ல. முழுக்க, முழுக்க இது அரசியல்.

இந்த அரசியலில் அ.தி.மு.க.வுக்கும், பிஜேவுக்கும் இருக்கக்கூடிய இரகசிய தொடர்புகள் இன்றைக்கு வெளியே வந்திருக்கிறது. அதைத்தான் நம்முடைய அவை முன்னவர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது என்று சொன்னார்.

இன்றைக்கு வெளிப்படையாக அந்த அம்மையார் பெயர் கூட வைக்காமல் திருப்பி அனுப்பி இருப்பதை கண்டிக்கக்கூடிய சூழ்நிலை இல்லாமல், ஏன் அந்த அம்மையார் பெயரை வைக்காமல் நீங்கள் திருப்பி அனுப்பியிருக்கிறீர்கள் என்று கேட்கக்கூடிய அந்த திராணி இல்லாமல், மீண்டும் நாம் வைத்து அதே சட்ட முன்வடிவை அனுப்புகிற போது, அதை வரவேற்க கூட இன்றைக்கு அந்த அம்மையார் பெயராலேயே கட்சியை நடத்திக் கொண்டு அவருடைய புகழை பாடுவதாக சொல்லிக் கொண்டிருக்கக் கூடியவர்கள் அம்மையார் பெயரை அந்தப் பல்கலைக்கழகத்துக்கு வைக்கக்கூடிய மசோதாவைக் கூட வரவேற்பதற்கோ, ஏற்றுக் கொள்வதற்கோ மனம் வராமல், பிஜேபிவுடன் இருக்கக்கூடிய நட்புதான் முக்கியம், நாம் எங்கே ஏதாவது ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், டெல்லியில் இருக்கக்கூடியவர்கள் கோபித்துக் கொள்வார்களோ என்கின்ற அந்த பயத்தின் காரணமாக இன்றைக்கு அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள்.

கேள்வி : withhold என்றால் என்ன அர்த்தம்?

அமைச்சர் பதில்: withhold என்று ஆளுநர் சொல்லியிருந்தாலோ அல்லது குடியரசுத் தலைவர் சொல்லியிருந்தாலோ அது நிலைவையில் இருப்பதாக அர்த்தம் கிடையாது. The bill is no more under consideration withhold and returned ஆளுநர் withhold செய்து திருப்பி அனுப்புகிறார் என்று சொன்னால், அந்த சம்பந்தப்பட்ட பில் பரிசீலனையில் ஒரு போதும் இல்லை. Withhold and returned என்று வந்துவிட்டால், அவர் அதற்கான ஒத்திசைவை, தன்னுடைய ஏற்பிசைவை அளிக்கவில்லை. இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அந்த குறிப்பிட்ட பில், அந்த சட்ட முன்வடிவை ஆளுநர் நிராகிக்கிறார் என்பதுதான் பொருளாகும். ஏற்கனவே, நீட் பிரச்சனையில், நாம் சட்டமன்றத்தில் கடந்த அதிமுக ஆட்சியில் இருந்தபோது, இதேபோல ஒரு பில்லை குடியரசுத் தலைவருக்கு அனுப்புகிற போது, குடியரசுத் தலைவரும் இதேபோல withheld and returned என்று அனுப்பி வைத்தார். அன்றைக்கும் சட்டசபையில் என்ன சொன்னார்கள், இதை அவர் நிராகரிக்க வில்லை, with held தான் செய்திருக்கிறார் என்று ஒரு சொத்தை வாதத்தை சொன்னார்கள். ஆனால், அதற்கு அடுத்து நீதிமன்றங்களிலும், பல இடங்களிலும் அது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. Withheld என்று சொன்னாலே, ஏற்றுக் கொள்ளப்படவில்லை, அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை தொடர்ச்சியாக நீதிமன்ற வாதங்களும், அன்றைக்கு இருக்கக்கூடிய ஒன்றிய அரசின் சார்பில் வந்திருந்த வழக்குரைஞர்களும் (solicitors) விவாதத்தில் அன்றைக்கு தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். எனவே, with hold என்பதை மாத்திரம் சொல்லிவிட்டு, ஆளுநர் அதை நிராகரிக்கவில்லை, அவருடைய பரிசீலனையில், நிலுவையில்தான் வைத்திருக்கிறார் என்று சொல்வது முற்றிலும் தவறானது. அதைத்தான் சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

கேள்வி : ஆளுநர் அவர்கள் அவருடைய அரசியலமைப்பு அதிகாரத்தைதான் உபயோகித்திருக்கிறார், அரசியலமைப்புக்குள்தான் அவர் செயல்படுகிறார் அதனால் ஆளுநருடைய தவறு ஏதும் கிடையாது என்று சொல்கிறார்கள். அது பற்றி...

அமைச்சர் பதில்: இத்தனை நாட்கள் ஆகியும், எந்தவித காரணமும் சொல்லாமல் அப்படியே வைத்திருக்கிறார். இப்போதுகூட அரசாங்கம் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்ற பிறகு இந்த நடவடிக்கை ஏற்பட்டிருக்கிறது. இடைப்பட்ட காலத்தில் உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கு முன்பாகவே நாம் பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம். குடியரசுத் தலைவர் அவர்களிடத்தில் எடுத்துச் சென்றிருக்கிறோம். தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரை சந்தித்தும் வலியுறுத்தி இருக்கிறார்கள். ஜனநாயக ரீதியாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கின்றபோது இந்த மசோதாக்கள் மீது எந்தவொரு முடிவையும் எடுக்காத ஆளுநர் அவர்கள், இன்றைக்கு உச்சநீதிமன்றத்திற்கு சென்றதற்கு பிறகு இதை திருப்பி அனுப்பி யிருக்கிறார். அதிலும் முற்றிலுமாக அவர்கள் திருப்பி அனுப்பியிருக்கிறார் என்பது உண்மை.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியளித்தார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநில உரிமை மீட்பு இரண்டாவது மாநில மாநாட்டிற்கான' இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியை கடந்த 15 ஆம் தேதி கன்னியாகுமரி – திருவள்ளுவர் சிலை முன்பாக தொடங்கி வைத்த தறிவோம்! இந்த இருசக்கர வாகனப் பேரணி தமது திருவெறும்பூர் தொகுதி வருகை புரிந்ததையொட்டி திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இரு சக்கர வாகனங்களில் வந்த இளைஞர்களை வரவேற்று திருவெறும்பூர் தொகுதிக்கான பிரச்சாரத்தை கொடியசைத்து தொடங்கி வைத்து பிரச்சாரத்தில் கலந்து கொண்டார். உடன் இரு சக்கர வாகனப் பிரச்சார ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ் மாறன் மற்றும் கலைஞர் மண்டலப் பொறுப்பாளர்கள் பர்மா ரூபன், கடலூர் முத்துக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# நீடாமங்கலம் தெற்கு ஒன்றியத்தில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம்!

திருவாரூர், நவ. 20 - நீடாமங்கலம் தெற்கு ஒன்றியத்தில் நீட் தேர்வைரத்து செய்ய கோரும் மாபெரும் கையெழுத்து இயக்கம் திருவாரூர் மாவட்ட மாணவரணி சார்பில் கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர் நா.கவியரசு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பகலவன் உள்ளிட்டோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவ கனவை அழிக்கும் நோக்கத்தில் ஒன்றிய பி.ஜே.பி. அரசால் கொண்டுவரப்பட்டிருக்கும் நீட் தேர்வை அகற்றும் சட்டப்போராட்டத்தை முழு வீச்சில் நடத்தும் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களின் முயற்சிக்கு மேலும் ஆதரவு அளிக்கும் வகையில் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் “நீட் விலக்கு அதுவே நம் இலக்கு” எனும் மாபெரும் கையெழுத்து இயக்கம் தமிழ்நாடு முழுவதும் எழுச்சியோடு நடைபெற்று வருகிறது.

மாணவர்களும் இளைஞர்களும் தாமாக முன் வந்து கையெழுத்திட்டு வருகின்றனர்.

நீடாமங்கலம் தெற்கு ஒன்றிய கழகம் வடுவூரில் நீட் ரத்து செய்ய கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் கழக சட்டத் திட்ட திருத்த குழு உறுப்பினர் பி.இராசமாணிக்கம் தலைமையில், ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் நா.கவியரசு முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சா.பகலவன் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பா.அரவிந்த், நீலமேகம் (தொ. மு.ச.), கல்யாணசுந்தரம், சண்முகம், கமலஹாசன், செல்வேந்திரன், இளங்கோவன், மற்றும் கழக மாணவர் அணி, இளைஞர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளும், இளைஞர்களும், பொதுமக்களும் தமாக முனவந்து நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்திட்டனர். அதேபோல் செல் போன் செயலியின் மூலமாகவும் 3000மேற்பட்டோர் கையெழுத்திட்டு நீடாமங்கலம் தெற்கு ஒன்றியத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கையெழுத்து இடும் பணிகளை மாணவரணி சார்பில் முழுவீச்சில் நடத்தி வருகின்றனர் .




# திராவிட மாடல் அரசு 43

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



## கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரும் ‘கரன்ட்!’

நவம்பர் மாத அடை மழைக்கு அஞ்சுபவர்களைவிட ‘கரன்ட் போயிருமோ...’ என்ற கலக்கத்தில் இருப்பவர்கள்தான் இங்கு அதிகம். மழைக்காலம் என்றாலே மருத்துவமும் மின்சாரமும் இன்றியமையாதத் தேவைகள் ஆகிவிடுகின்றன. மின்வெட்டு, மின் தடங்கல், வோல்டேஜ் குறைவது, ஃப்யூஸ் போவது, மின் மாற்றிகள் வெடிப்பது என மின்சாரம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் இந்தக் காலத்தில் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

அதுவும் பண்டிகைக் காலங்களில், வீடுகளில் அதிக அளவு மின்சாரப் பயன்பாடு இருக்கின்ற சூழலில், மழையும் காற்றும் தங்களின் கைவரிசையைக் காட்டினால், மேற்கண்ட பிரச்சினைகள் ஏற்படுவது இயற்கையே. அந்தப் பிரச்சினைகள் எவ்வளவு விரைவாகத் தீர்க்கப்படுகின்றன என்பதில் உள்ளது மக்கள் மீதான அரசின் அக்கறை.

நம் கழக அரசு 2021-ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்கும் வரையில், மின்சாரம் தொடர்பான பிரச்சினைகளை உள்ளூர் மின்வாரிய அலுவலகங்களுக்கு நடையாக நடந்து, லைன்மேன்களைக் கெஞ்சிக் கூத்தாடி கூட்டிக்கொண்டு வந்து பழுதுகளைச் சரிசெய்யும் நிலை இருந்தது. அந்த அலைச்சலுக்குப் பயந்தே பலர், ‘கரன்ட் அதுவா வரும்போது வரட்டும்’ என்று முடங்கியிருந்தார்கள். அப்படி முடங்கியிருந்தவர்களின் குரலுக்கு ‘மின்னகம்’ மூலம் செவி சாய்த்திருக்கிறது நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’.

### தலைமைக்குத் தெரியும் மக்கள் குறைகள்

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு மின்சாரம் மிகவும் முக்கியமானது. அந்த மின்சாரம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து, மக்களின் கருத்துகளை நேரடியாக அறிந்துகொள்ள விரும்பினார் நம் தலைவர். அதை எப்படி மேற்கொள்வது? ஒவ்வோர் இடத்துக்கும் சென்று அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்பதைவிட, அந்தக் கருத்துகளை, குறைகளை எல்லாம் ஒரே இடத்தில் ஒருங்கிணைத்தால் அடுத்தடுத்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள முடியும். அந்த எண்ணத்தில் பிறந்ததுதான் **‘மின்னகம்-மின் நுகர்வோர் சேவை மையம்’**. 2021 ஜூன் 20 அன்று, கழகத் தலைவர் முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 44 மின் பகிர்வு மாவட்டங்கள் இருக்கின்றன. மின்னகம் தொடங்கப்படுவதற்கு முன்பு வரை, நுகர்வோர்கள் தங்கள் குறைகளைத் தெரிவிப்பதற்கு 1912 என்ற சேவை எண் செயல்பாட்டில் இருந்தது. அந்த எண்ணுக்குத் தொடர்புகொண்டால், குறிப்பிட்ட அந்த மின் பகிர்வு மாவட்டத்துடன் அந்தக் குறை கையாளப்படும். அது மின்சாரத் துறை அமைச்சருக்கோ அல்லது முதல்வருக்கோ தெரியாது. ஆனால், மின்னகம் தொடங்கப்பட்ட பிறகு, சென்னையில் உள்ள ‘மின்னகம்’ மையத்தில், மாநிலம் முழுமையும் இருந்து குறைகள் தெரிவிக்கப்படுவதால், எந்த இடத்தில் என்ன வகையான பிரச்சினை, எப்போதெல்லாம் ஏற்படுகிறது, அவற்றுக்கு எப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை, துறைசார் அமைச்சரும் முதல்வரும் அறிந்துகொள்ள முடிகிறது.



இவ்வாறு, மக்களின் குறைகளை அமைச்சரும் முதலமைச்சரும் நேரடியாக அறிய முடிகிறது என்ற விஷயமே மடுவுக்கும் மலைக்குமான வித்தியாசத்தை எடுத்துக்காட்டுகிறது. 24 மணி நேரமும் மக்களுடன் தொடர்பில் இருக்கிற தலைமை என்கிற நடைமுறை, சிறந்த ஆட்சிக்கான ‘மாடல்!’. மின்சாரம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்க்கட்சி எப்படிக் கையாண்டது, தி.மு.க. அரசு எப்படிக் கையாள்கிறது என்பதற்கு இந்தத் திட்டமே சான்று.

### குறைகள் களையும் தொழில்நுட்பத் துல்லியம்

‘ஸ்விட்சைத் தட்டினால் பல்பு எரிகிறது’ என்பதுதான் இங்கு மின்சாரம் குறித்து பலரின் புரிதல். ஆனால், ஸ்விட்சை தட்டும் அந்தக் கண நேரத்துக்கும், பல்பு எரியத் தொடங்கும் அந்த கண நேரத்துக்கும் இடையில், எண்ணற்ற விஷயங்கள் நடைபெறுகின்றன. அது அறிவியல். அதுபோன்ற அறிவியல் துல்லியத்துடன் இயங்குகிறது ‘மின்னகம்’ மையம்.

இந்த மையத்தின் எண்: 94987-94987 என்பதாகும். இதற்கு முன்பு வரை, நுகர்வோர் சேவைக்கென்று, அது எந்தத் திட்டமாக இருந்தாலும், அவற்றுக்கு ‘டோல் ஃப்ரீ’ எண் கொடுக்கப்படுவதுதான் நடைமுறை. இந்தியா முழுக்க, இதுதான் நிலைமை. ஆனால், நாட்டிலேயே முதல்முறையாக நுகர்வோர் சேவைக்கென்று, கைப்பேசி எண் உள்ள திட்டம் ‘மின்னகம்’தான். ஒரே சமயத்தில் பல அழைப்புகளை இந்த எண்ணில் பெற முடிகிற ‘சாஃப்ட்வேர்’, ‘சர்வர்’ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், தமிழ்நாட்டின் எந்த மூலையிலிருந்து அழைத்தாலும், அந்த அழைப்பு முதலில் சென்னையில் உள்ள ‘மின்னகம்’ தலைமை மையத்தில் பெறப்பட்டு, பிறகு குறிப்பிட்ட மின் பகிர்வு மாவட்டங்களில் உள்ள உதவிப் பொறியாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நுகர்வோர் ஒருவர் தனது குறையைச் சொல்லிவிட்டு, அழைப்பைத் துண்டித்த மறுகணமே குறிப்பிட்ட மின் பகிர்வு மாவட்டத்தில் உள்ள பணியாளர் ஒருவர் நுகர்வோரைத் தொடர்புகொண்டு அவரது குறை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்துத் தகவல் தெரிவிப்பார். தொடர்ந்து, அந்தப் பிரச்சினை சரிசெய்யப்பட்ட பின்னரும், உதவிப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து நுகர்வோரைத் தொடர்புகொண்டு, ‘சேவை திருப்தியாக இருந்ததா’ என்று கேட்பார். நுகர்வோரின் பிரச்சினை தீர்க்கப்பட்டு, சேவை திருப்திகரமாக இருந்தால் அந்தப் பிரச்சினை முடித்து வைக்கப்படும். இல்லை என்றால், அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

### புகார்கள் 21 இலட்சம்... திருப்தி நூறு சதவிகிதம்...

இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் தீர்வு காணப்படாத குறைகளை, ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் ஒரு முறை மின்சாரத் துறை அமைச்சரால் ஆய்வு செய்யப்பட்டு, அந்தக் குறைகள் தொடர்புடைய மின் பகிர்வு மாவட்ட மின் துறை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விவரங்களைக் கேட்டறிந்து, மேற்கொள்ள வேண்டிய பணிகள் முடுக்கிவிடப்படுகின்றன.

இப்படி ‘மின்னகம்’ மையம் மூலமாக, இந்தச் சேவை தொடங்கப்பட்ட நாள் முதல் இப்போது வரை சுமார் 21 இலட்சம் புகார்கள் பெறப்பட்டு, அவற்றில் சில ஆயிரம் புகார்கள் தவிர, மற்ற அனைத்துப் புகார்களிலும் நூறு சதவிகித நுகர்வோர் திருப்தி என்ற சாதனை படைக்கப்பட்டுள்ளது. தீர்வு காணப்படாத புகார்களுக்கும் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நுகர்வோர் சேவை மையம் தொடங்கப்பட்டு, பெறப்பட்ட 10 இலட்சமாவது புகார்தாரரிடம் நமது முதலமைச்சரே தொலைபேசி வழியாக உரையாடி, அவரது குறைகளைக் கேட்டறிந்தார்.

‘திராவிட மாடல் அரசு’ அறிமுகப்படுத்திய இந்தத் திட்டத்தைப் பின்பற்றி, தற்போது ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களில் இது போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மின்னகத்தின் வெற்றி சொல்வது ஒன்றைத்தான்... இந்தியாவுக்கு விடியல் தமிழ்நாட்டில் இருந்துதான்!

**...சாதனை தொடரும்**




### ‘மின்னகம்’ முளைத்தது... ‘விடியல்’ பிறந்தது..!

மின்னகத்துகாக 8 மாநிலங்களில் இருந்து 109 கணினிகள் வாங்கப்பட்டன. அடுத்தபடியாக, இந்தத் திட்டத்துக்கான மென்பொருட்கள் உருவாக்கப்பட்டன. தொடர்ந்து, பி.எஸ்.என்.எல். நிறுவனத்துடன் இணைந்து இந்தத் திட்டத்துக்குத் தேவைப்படும் ‘எஸ்.ஐ.பி. (ஸிப்) சர்வர்’ அமைக்கப்பட்டது. இந்தப் பணிகளுக்கு இடையே, ஒரு மின் பகிர்வு மாவட்டத்துக்கு 4 பணியாளர்கள் வீதம், 44 மாவட்டங்களுக்கு 176 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அது தவிர, ‘மின்னகம்’ திட்ட தலைமையிடத்தில் 207 பணியாளர்கள் என, மொத்தம் 383 பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, 24 மணி நேரமும் இந்த மையம் இயங்கி வருகிறது.

- பெறப்பட்ட புகார்கள் : **21,37,464**
- தீர்வு காணப்பட்ட புகார்கள் : **21,28,612**
- தீர்வு காண முயற்சிக்கப்படும் புகார்கள் : **8,852**
- தீர்வு காணப்படும் சதவிகிதம் : **100**
- கையாளப்படும் புகார்களின் வகைகள் : **36**

## ஆங்கிலத்தில் வ.உ.சி.

தேசிய விடுதலை இயக்க வரலாற்றாசிரியர்களால் ‘இருண்ட மாகாணம்’ என்று சொல்லப்பட்ட மெட்ராஸ் மாகாணத்தில் எரி நட்சத்திரம் போல் தென்கோடியில் தேசிய விடுதலைக்காகச் செயல்பட்டவர் **‘கப்பலோட்டிய தமிழன்’** என்று அறியப்படும் வ.உ.சிதம்பரம் அவர்கள்.




வ.உ.சி.யின் 150-வது பிறந்த ஆண்டையொட்டி, தமிழில் முன்னெப்போதையும்விட கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர் குறித்து நிறைய புத்தகங்கள் வெளி வந்துள்ளன. அவற்றில், ‘வ.உ.சி.யும் காந்தியும்: 347 ரூபாய் 12 அணா’, வ.உ.சியின் சிவஞான போத உரை’, ‘திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும்’, ‘வ.உ.சி: வாராது வந்த மாமணி’ ஆகிய நூல்களை எழுதிய வரலாற்றாசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி, தற்போது வ.உ.சி. குறித்து ஆங்கிலத்தில் நூல் ஒன்றை எழுதியிருக்கிறார். தமிழிலேயே தற்சமயம்தான் வ.உ.சி. குறித்து, புத்தகங்கள் அதிக அளவில் வருகின்றன என்கிற நிலையில், ஆங்கிலத்தில் அவர் குறித்து வெளியான நூல்கள் என்றால், பூஜ்யம்தான். இந்தக் குறையைப் போக்கும் வகையில், இந்த ஆண்டின் இறுதியில், தமிழ்நாடு அரசின் பாரதி விருது பெற்ற வேங்கடாசலபதியின் ‘Swadeshi Steam: V.O. Chidambaram Pillai and the Battle against the British Maritime Empire’ என்ற நூல் வெளியாகவுள்ளது.

விரிவான அடிக்குறிப்புகளோடு 500 பக்கங்கள் கொண்ட இந்நூல் தமிழ்நாட்டின் சமூக நீதிப் போராட்டங்களை அறிய தொடங்கி இருக்கும் இந்திய ஒன்றியத்துக்குத் தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றை உரக்கச் சொல்லப் போகிறது.

## :ப்ளாஷ்பேக்



### இயல்பான பண்பு!



விஜயகுமார்

இன்றைய கழகத் தலைவரும் முதலமைச்சருமான தளபதி அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்த போது கோவை மாவட்டத்துக்கு வருகை தந்தார். 1995-ஆம் ஆண்டு டிசம்பர் 24 அன்று கோவை மாவட்டத்தில், சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு மாலை நேரத்தில் சர்க்கார் சாமக்குளத்தில் கழகக் கொடியேற்றும் நிகழ்வில் தலைவர் தளபதி அவர்கள் பங்கேற்றார். கழகத் தோழர்களிடம் இயல்பாகப் பழகிய பண்பு எங்களை எல்லாம் கவர்ந்தது. அப்போது கிளைக் கழகப் பொருளாளராக இருந்த எனக்கு, அவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அமைந்ததை எண்ணி மகிழ்கிறேன்.

**-அ.விஜயகுமார், கிளைக்கழக முன்னாள் பொருளாளர், கோவை வடக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033– 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### எத்தகைய தியாகத்துக்கும் தயார்

**1960 ஆம் ஆண்டு சென்னை கோடம்பாக்கத்தில் தி.மு.க சார்பில், இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வருகை தந்தனர். மாநாட்டை நாவலர் தொடங்கி வைத்தார். பேரறிஞர் அண்ணா தலைமை தாங்கினார். “இந்தித் திணிப்புப் போரில் எத்தகைய தியாகத்துக்கும் உடன்படக் கூடிய அளவுக்கு நீங்கள் உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்” என்ற அண்ணாவின் பேச்சு, கழகத்தினருக்கு உத்வேகம் அளித்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 305




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.